**தலைப்பு 306 – இலங்கை புகையிரதத் திணைக்களம்**

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

தலைப்பு 306 – இலங்கை புகையிரதத் திணைக்களத்தின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளுக்கு உரிய தகவல்களையும் உள்ளடக்கி நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்புக்களுடன் கூடிய 2023 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்துடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(1) பிரிவின் பிரகாரம் இலங்கை புகையிரதத் திணைக்களத்தின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் உள்ளடங்கிய பொழிப்பறிக்கை 2024 மே 31 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(2) பிரிவின் பிரகாரம் திணைக்களத்திற்குரிய விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2024 மே 31 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படுகின்றது.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தை தவிர்த்து, நிதிக்கூற்றுக்கள் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான இலங்கை புகையிரதத் திணைக்களத்தின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று என்பன பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க உண்மையானதும் நியாயமானதுமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்புக்கள்

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு அமைவாகவும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38 பிரிவில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல், மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக

ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) பிரிவின் பிரகாரம் திணைக்களத்தால் வருடாந்த மற்றும் உரிய நேரத்தில் நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்க கூடிய வகையில் தனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரிய வகையில் புத்தகங்கள் மற்றும் அறிக்கைகளை பேணிச் செல்லப்படல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் திணைக்களத்தின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்றை தயாரித்து பேணிச் செல்லுவதனை கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்த வேண்டியிருந்ததுடன் அம்முறைமையின் செயற்திறன் தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வொன்று செய்யப்பட்டு அதன் பிரகாரம் முறைமையை செயற்திறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் செய்யப்படல் வேண்டும்.

### 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நிமங்களின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. என்னால்

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு திணைக்களத்தின் உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமான தன்மை தொடர்பாக அபிப்பராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதாக மதிப்பீடு செய்தல்.

- ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பிக்கும் போதும் நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கான கொடுக்கல் வாங்கல்கள் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளதாகவும்

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

## 1.5 ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ) பிரிவின் பிரகாரம் பின்வரும் விடயங்களை நான் தெரிவித்துக்கொள்கின்றேன்.

(அ) நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டின் நிதிக்கூற்றுக்களுடன் நேரொத்ததாக உள்ளது எனவும்,

(ஆ) முன்னைய ஆண்டிற்குரிய நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக என்னால் கீழே குறிப்பிடப்பட்ட பரிந்துரைகள் அமுல்படுத்தப்பட்டிருக்கவில்லை.

| **முன்னைய ஆண்டுக்குரிய அறிக்கையுடனான தொடர்பு** | **அமுல்படுத்தப்படாதிருந்த பரிந்துரைகள்** | **இந்த அறிக்கையின் பந்தியுடனான தொடர்பு** |
|---|---|---|
| 1.6.1(அ)(ii) | 2015 திசெம்பர் 31 ஆந் திகதிக்கு முன்னர் காணப்பட்ட முன்னர் இருந்த புகையிரத பொது முகாமையாளரின் தனிப்பட்ட கணக்கிற்குரியதாக கிடைக்க வேண்டியதாக குறிப்பிட வேண்டிய ரூபா 1,000,515,781 இனால் 2022 ஆம் ஆண்டின் போது ரூபா 740,148,051 அறவிட வேண்டியதாக அறிக்கை இட்டதன் அடிப்படையின் கீழ் வெளிப்படுத்தப்பட்டிருந்த போதிலும் மிகுதி கிடைக்க வேண்டிய ரூபா 260,367,030 பெறுமதி நிதிநிலைமைக் கூற்றில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | 1.6.1(உ) |
| 1.6.1(ஈ)(i) | 2022 ஆம் ஆண்டின் நிதிச் செயலாற்றல் கூற்றின் பிரகாரம் சொத்துக்கள் கைப்பற்றுவதற்குரிய மூலதன செலவின விடயத்தின் பிரகாரம் பெறுமதி ரூபா 15,285,208,816 ஆக இருந்ததுடன் கணக்கிலும் மற்றும் திறைசேரி அச்சிடல் குறிப்பிலும் SA 82 இன் பிரகாரம் கொள்வனவு செய்தல் பெறுமதி ரூபா 2,403,765,858 ஆக இருந்தது. அதன் பிரகாரம் வேறுபாடு ரூபா 12,881,442,958 ஆகும். | 1.6.1(ஈ)i) |

| | | |
|---|---|---|
| 1.6.1(உ)(iii) | களஞ்சிய முற்பணக் கணக்கில் திணைக்கள புத்தகங்களின் பிரகாரம் மீதி திறைசேரி அச்சிடல் குறிப்பின் பிரகாரம் மீதிக்கு சமமாக இருக்க வேண்டிய போதிலும் அவ்வாறு இல்லாமையின் காரணமாக ரூபா 403,366,221 மிகை மதிப்பீடாக குறிப்பிடப்பட்டு திணைக்களப் புத்தகங்களின் பிரகாரம் மீதியில் கழித்து திறைசேரி அச்சிடல் குறிப்பின் பிரகாரம் மீதி சமமாக்கப்பட்டிருந்தது. | 1.6.1(இ)(i) |
| 1.6.1(உ)(iv) | 1993 ஆம் ஆண்டு முதல் 2022 ஆம் ஆண்டு வரை பொருட்கள் இறக்குமதி செய்யும் போது சுங்க கட்டணமாக ஏற்பட்ட செலவினம் இருப்பில் சீராக்குவதற்கு நடவடிக்கை எடுக்காமையின் காரணமாக இருப்பின் பெறுமதி ரூபா 78,197,076 குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது. | 1.6.6(இ)(ii) |
| 1.6.1(ஊ)(i) | 2022 ஆம் ஆண்டின் போது திணைக்களப் புத்தகங்களின் பிரகாரம் அரசாங்க உத்தியோகத்தர்களின் முற்பணக் கட்டுப்பாட்டுக் கணக்கின் ஆரம்ப மீதி ரூபா 1,118,983,421 ஆக இருந்ததுடன் அது திறைசேரி அச்சிடல் குறிப்பின் பிரகாரம் ரூபா 1,123,161,226 ஆனமையால் திணைக்கள புத்தகங்களுக்கும் திறைசேரி அச்சிடல் பிரதிகளுக்கும் இடையே ரூபா 4,177,805 வேறுபாடு காணப்பட்டது. 2004 ஆம் ஆண்டு முதல் இதுவரை 19 வருடங்கள் கடந்திருந்த போதும் இந்த மீதியைத் தீர்த்து வைப்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | 1.6.1(ஆ)(i) |

## 1.6 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 1.6.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

**(அ) அரசாங்க உத்தியோகத்தர்களின் முற்பணக் கணக்கு தொடர்பான இணக்கக் கூற்று**

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|---|
| (i) | 15 உப திணைக்களங்களின் வேலை நீக்கம் செய்யப்பட்ட உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிட வேண்டிய ரூபா 17,828,124 கடன் மீதியை மீள அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. அதில் | எதிர்காலத்தில் நிலுவைக் கடன் பணத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என அறியத்தருகின்றோம். | பழைய கடன் மீதிகளை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | 61 சதவீதமான ரூபா 10,918,457 கடன் மீதி 05 வருடங்களை விட அதிக காலத்தை விஞ்சியிருந்ததுடன் அந்த கடன் மீதியில் 35 சதவீதம் பிரதான பொறியியலாளர் (ஓட்ட) உப திணைக்களத்திற்கு உரியதாகும். | | |
| (ii) | இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் தாபன விதிக் கோவையின் XXIV அத்தியாயத்தின் 04 ஆம் பந்தியின் பிரகாரம் நடவடிக்கை எடுக்காமையின் காரணமாக ஓய்வு பெற்றுச் சென்ற மற்றும் மரணமடைந்த உத்தியோகத்தர்களின் ஒரு வருடத்திற்கு குறைந்த 01 இற்கும் 10 வருடங்களுக்கும் இடையே, 10 இற்கும் 20 வருடங்களுக்கும் இடையே மற்றும் 20 வருடங்களுக்கு மேற்பட்ட ரூபா 52,296,852 கடன் மீதியை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | நிலுவைக் கடன் மீதிகளில் ஒரு பகுதி அறவிடப்பட்டுள்ளதுடன் எதிர்காலத்தில் மிகுதி நிலுவைத் தொகையையும் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என அறியத்தருகின்றோம். | பிரமாணங்களின் பிரகாரம் பழைய கடன் மீதியை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

**(ஆ) களஞ்சிய முற்பணக் கணக்கு**

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|---|
| (i) | திணைக்கள புத்தகங்களின் பிரகாரம் மீதி மற்றும் திறைசேரி அச்சிடல் குறிப்பின் பிரகாரம் மீதி சமமாக இருக்க வேண்டிய போதிலும் அவ்வாறு இல்லாமையின் காரணமாக மிகை மதிப்பீடாக திணைக்களப் புத்தகங்களின் பிரகாரம் மீதி ரூபா 403,366,221 குறைத்து திறைசேரி அச்சிடல் குறிப்பின் பிரகாரம் மீதிக்கு சமனாக்கப்பட்டிருந்தது. | நீண்ட காலம் முதல் கொண்டு வரப்படுகின்ற முதல் பழைய மீதியாக இருந்தமையால் சரியான மூலத்தகவல்களுக்கு நுழைவதற்கு வசதியீனத்தின் அடிப்படையில் தீர்த்து வைத்தலில் தாமதம் ஏற்பட்டிருந்ததை ஏற்றுக் கொள்கின்றோம். இதன் போது திறைசேரிக்கு செலுத்த வேண்டிய மீதியில் குறைவு ஒன்று காண்பிக்கப்படாதிருந்தது டன் திறைசேரியினால் | நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் திறைசேரி கணனி அச்சிடல் குறிப்பு திணைக்கள புத்தகங்களும் சரியாகத் தயாரிக்க வேண்டியிருந்ததுடன் வேறுபாடுகளை பரீட்சித்து சரி செய்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | காண்பிக்கப்படுகின்ற மீதியின் பிரகாரம் திணைக்கள புத்தகங்களின் மீதி சரிசெய்தல் மாத்திரம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. 2014 ஆம் ஆண்டின் பின்னர் இதுவரை திறைசேரி அச்சிடல் குறிப்பு பத்திரம் மற்றும் களஞ்சிய முற்பணக் கணக்கின் வரவு மற்றும் செலவு வைத்தலில் வேறுபாடுகள் இல்லாதிருந்ததுடன் இது தொடர்பாக கண்டறிந்து சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என அறியத் தருகின்றோம். | |
| (ii) | 1993 ஆம் ஆண்டு முதல் 2023 ஆம் ஆண்டு வரை பொருட்கள் இறக்குமதியின் போது சுங்க கட்டணமாக ஏற்பட்ட செலவினம் இருப்பில் சீராக்குவதற்கு நடவடிக்கை எடுக்காமையின் காரணமாக இருப்புப் பெறுமதி ரூபா 93,918,027 குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது. | பொருள் பெறுவனவு பத்திரம் விநியோகிக்காமையின் காரணமாக இருப்பில் உள்ளடக்குவதற்கு தாமதமாக இருந்த போதிலும் எதிர்காலத்தில் பொருள் பெறுவனவுப் பத்திரத்தை விரைவாகப் பெற்று இந்த மீதியை இருப்பில் உள்ளடக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என தயவுடன் அறியத்தருகின்றோம். | பொருள் பெறுவனவுப் பத்திரத்தை விரைவாகப் பெற்று சுங்க கட்டண பெறுமதியை இருப்பில் சீராக்குவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (iii) | புதிய புகையிர தண்டவாளங்கள் மற்றும் சிலிப்பர் கட்டைகள் காணப்படுகின்ற புகையிர வீதிகளை மறுசீரமைத்தல் செலவின விடயத்தின் கீழ் செலவிட வேண்டிய ரூபா 142,579,946 செலவினம் ஒன்று களஞ்சிய முற்பணக் கணக்கில் ஆண்டில் வரவு வைத்தலின் கீழ் ஏனைய வரவு வைத்தலாக காண்பிக்கப்பட்டதன் காரணமாக களஞ்சிய முற்பணக் கணக்கின் | 2024 ஆம் ஆண்டின் போது சரிசெய்வதாக குறிப்பிடப்பட்டுள்ளது. மேலும் 2023 ஆம் ஆண்டின் போது அந்த மீதி வரவு எல்லையில் உள்ளடங்கி இருந்த போதும் எல்லையில் இருப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என அறியத்தருகின்றோம். | உரிய கொடுப்பனவுகள் மாத்திரம் ஆண்டில் வரவு வைத்தலாக உள்ளடக்குதல் வேண்டும். |

ஆண்டின் வரவு வைத்தல் ரூபா 142,579,946 இனால் தொகை அதிகரித்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

**(இ) ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள்**

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|---|
| (i) | 2023 ஆம் ஆண்டில் நிதி செயலாற்றல் கூற்றின் பிரகாரம் மூலதன சொத்துக்கள் கைப்பற்றுவதற்கு மூலதன செலவின விடயத்தின் மூலம் ரூபா 5,320,929,724 செலவிடப்பட்டிருந்ததுடன் திறைசேரி அச்சிடல் குறிப்பு SA 82 இன் பிரகாரம் ஆண்டில் கொள்வனவு செய்தல்களின் பெறுமதி ரூபா 4,766,177,713 ஆனமையால் வேறுபாடு ரூபா 554,752,011 ஆகும். | நிதிச் செயலாற்றல் கூற்றில் உள்ளடக்கப்பட்டுள்ள விடயத்தின் செலவினம் ஆகும். நிதியல்லா சொத்துக்கள் கூற்றில் சொத்துக்கள் கொள்வனவு செய்யும் போது 2021 ஆம் ஆண்டில் இருந்து சிகாஸ் நிகழ்ச்சித் திட்டத்தின் சொத்துக்கள் முடிவுகளின் பிரகாரம் கொள்வனவு செய்து கணக்கீடு செய்யப்பட்ட முறையின் பிரகாரமே உள்ளடக்கப்பட்டுள்ளது. காணப்படுகின்ற வசதியீனம் மற்றும் கஸ்டங்களின் அடிப்படையில் ஆண்டின் இறுதியின் போது அந்த மொடியூல் நாளது வரையாக்கும் போது ஏற்பட்டிருந்த வழுக்களின் காரணமாக இந்த வேறுபாடு ஏற்பட்டிருந்தது. 2024 இன் சொத்துக்கள் மொடியூல் நாளது வரையாக்கி சரியாக சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | சொத்துக்கள் கொள்வனவு செய்தல் திறைசேரிக்கு சரியாக அறிக்கையிடப்படல் வேண்டும். |
| (ii) | நிதியல்லாச் சொத்துக்களில் 2024 மார்ச் 28 இல் உள்ளவாறு காணப்பட்ட திறைசேரி அச்சிடல் SA 82 இன் மீளாய்வாண்டின் ஆரம்ப மீதி மற்றும் முன்னைய ஆண்டின் இறுதி மீதி இணக்கம் செய்யும் போது ரூபா 64,628,506 வேறுபாடு காணப்பட்டது. | சுட்டிக்காட்டப்பட்டுள்ள ரூபா 64,628,506 ஆரம்ப மீதியில் வேறுபாடு இனங்காணப்பட்டுள்ளதுடன் இந்த ஆண்டின் இறுதியளவில் சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | மீளாய்வாண்டில் மீதி முன்னைய ஆண்டின் இறுதி மீதியுடன் இணக்கம் செய்யும் போது வேறுபாடுகள் காணப்படுமாயின் அவை நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தல் வேண்டும். |

(ஈ) கட்டுநிதி மீதி

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| 2015 திசெம்பர் 31 ஆந் திகதிக்கு முன்னர் கட்டுநிதி கணக்கிற்குப் பதிலாகக் காணப்பட்ட புகையிரத பொது முகாமையாளரின் தனிப்பட்ட கணக்கு 2016 சனவரி 01 ஆம் திகதி முதல் கட்டுநிதி கணக்கொன்று பெற்றுக் கொள்ளும் போது மூடப்பட்டிருந்ததுடன் 2022 சனவரி 01 ஆம் திகதியில் உள்ளவாறு அதன் மீதியான ரூபா 1,000,515,781 தொகையில் ரூபா 740,148,051 தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அதில் ரூபா 260,367,030 ஆன எஞ்சிய மீதி 2023 ஆம் ஆண்டில் தீர்க்கப்படுவதாக கடந்த ஆண்டின் நிதிக்கூற்றுக்களில் அறிக்கையிடல் அடிப்படையில் கீழ் வெளிப்படுத்தப்பட்டிருந்தது. மீளாய்வாண்டில் அதனைத் தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்காதிருந்தவுடன் திறைசேரிப் படிவம் SA 90 இன் கீழ் குறியீட்டு இலக்கம் 8003-0-0-0-0-0-0 இன் கீழ் மறை மீதியாக இந்தப் பெறுமதி காண்பிக்கப்பட்ட போதும் மீளாய்வாண்டினைப் போன்று முன்னைய ஆண்டிலும் நிதிக்கூற்றுக்களில் இது தொடர்பாக எந்த ஒரு வெளிப்படுத்தலும் மேற்கொள்ளப்படவில்லை. | நிதிக்கூற்றுக்களில் தனிப்பட்ட குறிப்பாக வெளியிடுவதற்காக நடவடிக்கை எடுப்பதற்கு குறிப்பிடப்பட்டுள்ளது. மேலும் பல்வேறு திணைக்களங்களின் மூலம் நிறுவனத்திற்கு கிடைக்க வேண்டிய புகையிரத ஆணைச்சீட்டுப் பத்திரங்களில் இருந்த அறவீடுகளைப் பெற்றுக்கொள்வதற்கான நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படுகின்றது. | நிதிக்கூற்றுக்களில் தேவையான வெளிப்படுத்தல்கள் மேற்கொள்ளப்படல் வேண்டும். |

(உ) தேறிய சொத்துக்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| நிதி நிலைமைக் கூற்றில் காண்பிக்கப்பட்டுள்ள தேறிய சொத்தின் பெறுமதியை உறுதிப்படுத்துவதற்காக அதில் உள்ளடக்கப்பட்ட மீதிகளின் அறிக்கையொன்று கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படாமையினால் அப் பெறுமதியை உறுதிப்படுத்த முடியாமல் இருந்தது. | எதிர்காலத்தில் சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என அறியத்தருகின்றோம். | உறுதிப்படுத்துவதற்குரிய எழுத்து மூல சான்றுகள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படல் வேண்டும். |

**(ஊ) பதிவேடுகள் மற்றும் புத்தகங்கள் பேணிச் செல்லப்படாமை**

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| <u>**பொறுப்புக்கள் தொடர்பான கூற்று**</u> | | |
| 2023 ஆம் ஆண்டின் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்ட ரூபா 634,774,174 பெறுமதியான செலவு மீதி ஒன்றை உறுதிப்படுத்துவதற்காக பொறுப்புப் பேரேடு கணக்காய்வுக்கு சமர்ப்பிக்கப்படாதிருந்ததுடன் அந்த பொறுப்புக்கள் உரித்தாகின்ற உப திணைக்களங்களையும் இனங்காண்பதற்கான தகவல்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படவில்லை. | ஒவ்வொரு திணைக்களத்திலும் பொறுப்புப் பதிவேடு பேணிச் செல்லப் படவேண்டி இருந்ததுடன் கணக்காய்வுக்காக சமர்ப்பிக்குமாறு உரிய பிரிவுகளுக்கு அறிவிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | நிதிப்பிரமாணம் 214 இன் பிரகாரம் பொறுப்புக்கள் தினந்தோறும் பரீட்சிக்கக் கூடிய வகையில் பொறுப்புப் பதிவேடு நானது வரையாக்கப்படல் வேண்டும். |

**(எ) கணக்காய்வு சான்றுகள் இன்மை**

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| மாகோ ஓட்டக்கூடத்தின் தாங்கியைச் சுத்திகரித்தல் 2022 ஒக்தோபர் 28 ஆந் திகதி மேற்கொள்ளப் பட்டிருந்ததுடன் அதில் சுத்தப்படுத்துவதற்கு முன் தாங்கியில் எரிபொருள் லீற்றர் 800 காணப்பட்டதுடன் அதன் போது இழப்பீடாக (Draining water and sediments) எரிபொருள் லீற்றர் 311 அகற்றப்பட்டு மிகுதி எரிபொருள் அளவு லீற்றர் 489 மீண்டும் தாங்கிக்கு மாற்றப்பட்டிருந்தது. எரிபொருள் லீற்றர் 311 இவ்வாறு வீணாகியமையினை அகற்றுதல் பிழையான பயன்பாட்டுக்கு ஈடுபடுத்தாதிருந்தமையை ஏற்றுக் கொள்வதற்காக போதியளவான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமை ஒன்று பின்பற்றப்பட்டிருக்கவில்லை. | பரீட்சித்து மிகுதி நடவடிக்கைகள் எடுக்கப்படும் என அறியத்தருகின்றோம். | உரிய பிரமாணங்கள் மற்றும் உள்ளக் கட்டுப்பாட்டு முறைமைகளின் பிரகாரம் அகற்றுதல் வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 வருமான முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| **(அ) வருமானம்** | | |
| புகையிரதத் திணைக்களத்தால் உரிய திட்டம் மற்றும் உரிய முகாமைத்துவம் இன்றி களஞ்சியம் கேள்வி கோரப்பட்டதன் மூலம் கொழும்பு பொருள் களஞ்சியத் தொகுதியில் 03 கடைகளில் இருந்து ரூபா 12,587,000 வருமானம் இழக்கப்பட்டிருந்ததுடன் புகையிரத திணைக்களத்திற்குச் சொந்தமான உணவு கூடம் மற்றும் 02 களஞ்சியப் பொருட்கள் வாடகைக்கு வழங்கியதன் மூலம் புகையிரதத் திணைக்களத்திற்கு கிடைக் வேண்டிய வருமானம் ரூபா 24,203,032 தொகை அறவிடப்பட்டிருக்கவில்லை. | 02 களஞ்சிய கட்டிடங்களைப் பயன்படுத்துவதற்காக நெஸனல் பத்திரிகை நிறுவனத்தில் இருந்து அறவிட வேண்டிய ரூபா 23,809,904.20 நிலுவை வாடகையை அறவிடுவதற்காக சட்டமா அதிபரின் ஆலோசனையின் பிரகாரம் இலக்கம் 18/நானாவித/(019) மற்றும் 2018.05.31 ஆந் திகதிய அரச நிறுவனங்களுக்கு இடையே சட்டரீதியான நடவடிக்கைகள் என்ற அமைச்சரவைப் பத்திரத்தின் பிரகாரம் அரச நிறுவனங்களுக்கு இடையே நிலுவைப் பணத்தை தீர்த்துவைப்பதற்காக தற்போது போக்குவரத்து அமைச்சின் செயலாளர் மூலம் கைத்தொழில் அமைச்சின் செயலாளருடன் தேவையான தொடர்பினை ஏற்படுத்தி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றது என அறியத்தருகின்றோம். | பெறவேண்டி வருமானங்களை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| **(ஆ) நிலுவை வருமானம்** | | |
| (i) வத்தேகமவில் அமைந்துள்ள 01 றூட் 24.5 பேர்ச் ஒதுக்கப் பிரதேசக் காணி 1963 திசெம்பர் 29 ஆம் திகதியில் இருந்து கையளித்தல் கட்டளையின் அடிப்படையில் இலங்கை பெற்றோலியக் | கோவைகளை மீண்டும் பரீட்சித்து நிலுவைப் பணத்தை அறவிடுவதற்கோ அல்லது சட்டரீதியான நடவடிக்கைகளை எடுக்குமாறோ பொறுப்பு | வாடகை உடன்படிக்கையின் பிரகாரம் வாடகைப் பெறுமதி கணிப்பிடப்பட்டு அறவிடப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | கூட்டுத்தாபனத்திற்கு வாடகைக்கு வழங்கப்பட்டிருந்தது. இந்த கையளித்தல் கட்டளையை அடிப்படையாகக் கொண்டு 1964 ஆம் ஆண்டு முதல் 2022 ஆம் ஆண்டு வரை 59 வருடங்களுக்காக மதிப்பீட்டின் பிரகாரம் அறவிட வேண்டிய ரூபா 12,192,825 வாடகைப் பெறுமதியை அறவிடுவதற்கு எந்த ஒரு நடவடிக்கையும் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | வாய்ந்த உத்தியோகத்தர்களுக்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது என அறியத்தருகின்றோம். | |
| (ii) | பேலியகொட நகரத்தில் வாடகை உடன்படிக்கை இலக்கம் LB 31134 என்ற புகையிரத ஒதுக்கப் பிரதேச காணிக்காக 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அறவிட வேண்டிய மொத்த வாடகை வருமானம் ரூபா 18,308,192 பெறுமதி, மாத்தளை நகரத்தில் வாடகை உடன்படிக்கை இலக்கம் LC 1899 என்ற புகையிரத ஒதுக்கப் பிரதேச காணிக்காக 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அறவிட வேண்டிய மொத்த வாடகை வருமானம் ரூபா 3,803,533 பெறுமதி மற்றும் மீரிகம நகரத்தில் வாடகை உடன்படிக்கை இலக்கம் LB 30037 என்ற புகையிரத ஒதுக்கப் பிரதேச காணிக்காக 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அறவிட வேண்டிய மொத்த வாடகை வருமானம் ரூபா 1,442,100 பெறுமதி என்பன மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் அறவிடப்பட்டிருக்க வில்லை. | பரீட்சித்து எதிர்காலத்தில் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என அறியத்தருகின்றோம். | அறவிட வேண்டிய வாடகை வருமானம் உடன்படிக்கையின் பிரகாரம் விரைவாக அறவிடப்படல் வேண்டும். |

**(இ) வியாபார பட்டியல் நிலுவை வருமானம்**

| | | | |
|---|---|---|---|
| (i) | 2000 ஆம் ஆண்டு முதல் 2013 ஆம் ஆண்டு வரை சேவை வழங்கிய 05 நிறுவனங்களில் இருந்து கிடைக்க வேண்டிய ரூபா 1,959,005 நிலுவை வருமானம் மற்றும் 2023 ஆம் ஆண்டின் இறுதி வரையில் ரூபா 43,919,951 ஆன பெற வேண்டிய நிலுவை வியாபார பட்டியல் வருமானம் என்பன மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் அறவிடப்பட்டிருக்க வில்லை. | ரூபா 1,959,005 நிலுவை வருமானத்தை அறவிடுவதற்காக மீள் நினைவூட்டல் கடிதம் அனுப்பபப்பட்டுள்ளதுடன் நிறுவன மட்டத்தில் மேலும் கலந்துரையாடல் நடாத்தப்படுகின்றது. அவ்வாறே நிலுவை வியாபார பட்டியல் வருமானத்தில் 2023 ஆம் ஆண்டுக்கு உரிய சகல நிலுவை பட்டியல்களும் அறவிடப்பட்டுள்ளது. | கிடைக்க வேண்டிய நிலுவை மீதியை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ii) | சியாம் சிட்டி சீமெந்து (லங்கா) கம்பனியில் இருந்து 2019 மற்றும் அதற்கு முன்னைய ஆண்டுகளுக்குரிய ரூபா 2,189,382 நிலுவை மீதியுடன் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கிடைக்க வேண்டிய நிலுவை வருமானம் ரூபா 3,569,089 ஆக இருந்ததுடன் அந்த மீதியை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை. | சியாம் சிட்டி சீமெந்து (லங்கா) கம்பனியில் இருந்து அறவிட வேண்டிய பெறுமதியில் ஒரு பகுதி 2024 ஆம் ஆண்டின் போது அறவிடபட்டிருந்ததுடன் மேலும் அறவிட வேண்டிய அந்த மீதியை அறவிடுவதற்கும் 2009, 2010 மற்றும் 2019 ஆம் ஆண்டுகளுக்குரிய நிலுவைத் தொகையான ரூபா 2,189,382 இனை தீர்த்து வைப்பதற்கும் நிறுவன மட்டத்தில் கலந்துரையாடல்கள் மேற்கொள்ளப்படுகின்றது. | நிலுவை வருமானத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 2.2 அதிகாரம் கிடைக்காத செயற்படு நட்டம்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| களஞ்சிய முற்பணக் கணக்கில் ரூபா 13 மில்லியன் தொழிற்படு நட்டம் ஒன்று காண்பிக்கப்பட்டதுடன் இதுவரை அதனைத் தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை. | எதிர்காலத்தில் பரீட்சித்து தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என அறியத்தருகின்றோம். | நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் உரிய தொழிற்படு நட்டத்தைத் தீர்த்து வைப்பதற்காக திறைசேரி நிதி ஏற்பாட்டை ஒதுக்கிக் கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 2.3 பொறுப்புக்கள் மற்றும் கடப்பாடுகளுக்கு உடன்படல்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| 2023 நவம்பர் 30 ஆந் திகதிய இலக்கம் 05/2023 என்ற அரச கணக்குகள் வழிகாட்டியின் 3.3 ஆம் பந்தியின் பிரகாரம் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறு சகல கடப்பாடுகள் மற்றும் பொறுப்புக்கள் இலக்கத்தின் பிரகாரம் வெளிப்படுத்த வேண்டியிருந்த போதிலும் புகையிரதத் திணைக்களத்தில் 02 உப திணைக்களங்களுக்கு உரிய ரூபா 1,131,855,611 பெறுமதியான கடப்பாடுகள் மற்றும் பொறுப்புக்கள் கணக்குகளில் வெளிப்படுத்தப்பட வில்லை. | எதிர்காலத்தில் வெளிப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு உப திணைக்களங்களுக்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. | அரச நிதி சுற்றறிக்கையின் ஏற்பாடுகளின் பிரகாரம் கடப்பாடுகள் மற்றும் பொறுப்புக்கள் கணக்கில் வெளிப்படுத்தப்படல் வேண்டும். |

**2.4 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை**

**அவதானிப்புக்கள்**

| | சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | பெறுமதி ரூபா | இணங்காமைகள் | கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|---|
| அ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் தாபன விதிக் கோவை | | | | |
| (i) | XIX அத்தியாயத்தின் 5.8 ஆம் பிரிவு | 92,398,532 | வருடம் ஒன்றுக்கு ரூபா 30 மில்லியன் தொகை மிகைக் கட்டணம் "நீர்ப் பட்டியல்" ஆக இரத்மலானை பிரதான இயந்திரப் பொறியியலாளர் உப திணைக்களத்தின் கொத்தலாவபுர புகையிரத வீடுகள் 546 இற்காக இலங்கை புகையிரதத் திணைக்களத்தால் செலவிடப்பட்டிருந்ததுடன் உத்தியோகத்தரிடம் இருந்து மாதத்திற்கு ரூபா 05 தொகை மாத்திரம் அறவிடப்பட்டதன் காரணமாக 2021, 2022 மற்றும் 2023 ஆம் ஆண்டுகளுக்கா ரூபா 92,398,532 தொகை நீர்ப் பட்டியலாக புகையிர திணைக்களத்தால் செலவிடப்பட்டிருந்தது. | 546 உத்தியோக பூர்வ இல்லங்களில் 509 இற்காக புதிய மாணி பொருத்தப்பட்டு Bulk வழங்கல் பூர்த்தி செய்யப்பட்டுள்ளது. நீர் மாணி பொருத்தாதிருந்த மிகுதி புகையிர வீடுகள் 07 இற்கும் நீர் மாணி புதிதாகப் பொருத்தப்பட்டு Bulk வழங்கல் நிறுத்தப்பட்டுள்ளது. மிகுதி வீடுகளில் தற்போது குடியிருக்காத வீடுகள் ஆகும். மாணி பொருத்தப்பட்டமையால் குறித்துரைத்த பிரகாரம் நீர்ப் பட்டியல்களை அறவிடல் மேற்கொள்ளப்படுகின்றது. | உரிய பிரகாரம் நீர் மாணிகளைப் பொருத்தி செலவினங்கள் முகாமைத்துவம் செய்யப்படல் வேண்டும். |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| (ii) | அரச நிர்வாக முகாமைத்துவ மற்றும் கால் நடை வள அபிவிருத்தி அமைச்சு செயலாளரின் 2019 செப்தெம்பர் 30 ஆம் திகதிய இலக்கம் 30/2019 என்ற அரச நிருவாக சுற்றறிக்கையின் 02 ஆம் பந்தியின் I ஆம் பிரிவின் மூலம் தாபன விதிக் கோவையின் II ஆம் தொகுதியின் XLVIII ஆம் அத்தியாயத்தின் 13.2 உப பிரிவின் திருத்தம் | - | புகையிரதம் தடம் புரள்தல், உடைதல் மற்றும் இழப்பிற்கு உட்படுவதற்கு பொறுப்பு வாய்ந்த தரப்பினருக்கு உரிய 2018 – 2022 ஆம் ஆண்டுகளில் இடம் பெற்ற 365 சம்பவங்களில் 357 சம்பவங்களுக்காக உரிய ஆரம்ப விசாரணை அறிக்கை 2022 நவம்பர் 30 ஆந் திகதி வரையிலும் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை. | எதிர்காலத்தில் தகவல்களை அறிக்கையிடுவதாக நடவடிக்கை எடுக்கப்படும் என அறியத் தருகின்றோம். | தாபன விதிக் கோவை மற்றும் அரச நிர்வாக சுற்றறிக்கையின் பிரகாரம் ஆரம்ப விசாரணைகள் நடாத்தப்படல் வேண்டும். |
| (iii) | 2022 ஆகஸ்ட் 12 ஆம் திகதிய இலக்கம் 01/2022 மற்றும் 2019 செப்தெம்பர் 30 ஆந் திகதிய இலக்கம் 30/2019 என்ற அரச நிருவாக சுற்றறிக்கை மூலம் திருத்தப்பட்ட தாபன விதிக் கோவையின் XLVIII ஆம் அத்தியாயத்தின் 13.2 உப பிரிவு மற்றும் | - | உத்தியோகத்தர்களின் ஒழுக்காற்று நடவடிக்கைகள் தொடர்பாக திணைக்களத்தின் 2003 ஆம் ஆண்டு முதல் 2023 ஆம் ஆண்டு வரையான காலத்தில் 50 ஆரம்ப விசாரணைகள் நடாத்தி பூர்த்தி செய்வதற்கு 03 மாதங்கள் முதல் 14 வருடங்களும் 03 மாத காலத்திற்கும் இடையிலான கால வீச்சினைக் கொண்டிருந்தது. நிறுவனத்தால் தற்போது நடாத்திச் செல்லப்படுகின்ற பூர்த்தி செய்யப்படாத | ஆரம்ப ஒழுக்காற்று விசாரணைகளுக்கான தேவையான விசாரணை உத்தியோகத்தர்கள், ஆரம்ப விசாரணை மேற்கொள்கின்ற உத்தியோகத்தர்கள், மாவட்ட போக்குவரத்து பரிசோதகர்கள் என்ற உத்தியோகத்தர்களில் காணப்படுகின்ற பற்றாக்குறை மற்றும் பொறியியலாளர் அறிக்கை, நீதி மன்ற மருத்துவ அறிக்கை, நீதிமன்ற நீதவான் அறிக்கை போன்றவற்றைப் பெற்றுக் கொள்வதில் தாமதம் அடைந்தமை மற்றும் காணப்பட்ட | தாபன விதிக் கோவை மற்றும் அரச நிருவாக சுற்றறிக்கையின் பிரகாரம் ஆரம்ப விசாரணை நடவடிக்கைகள் குறித்துரைத்த கால எல்லையில் பூர்த்தி செய்யப்படல் வேண்டும். |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | 13.12 ஆம் பிரிவுகள் | | 134 விசாரணைகள் காணப்படுவதுடன் அதில் 120 ஆரம்ப விசாரணைகளும் 03 மாதங்களை விஞ்சி இருந்தது. மேலும் உத்தியோகத்தர்கள் தொடர்பாக 30 ஆரம்ப விசாரணைகள் பூரத்தி செய்யப்பட்டு குற்றப் பத்திரிகை வரைவு செய்வதற்கு 02 மாதங்கள் முதல் 06 வருடங்களுக்கு இடையிலான கால வீச்சினை எடுத்திருந்தது. | கொவிட் 19 தொற்று நோயினால் ஆரம்ப விசாரணைகள் மேற்கொள்ளல் தாமதம் அடைந்திருந்தது. | |
| (iv) | புகையிரத பொது முகாமையாளரால் 2007 சனவரி 13 ஆந் திகதி விநியோகிக்கப்பட்ட பொ(மு)4/2016 4/2/68 என்ற சுற்றறிக்கையின் 01(i) மற்றும் தாபன விதிக் கோவையின் VIII ஆம் அத்தியாயத்தின் 5.6 ஆம் பிரிவு | - | சுற்றறிக்கையின் பிரகாரம் புகையிர பதவியணியினருக்குரிய அங்கத்தவர்களுக்காக மேலதிக நேரம் கணிப்பீடு 42 மணித்தியாலங்களுக்கு மேலதிகமாக சேவையாற்றிய மணித்தியால எண்ணிக்கை அடிப்படையாயக் கொண்டே கணிப்பிட வேண்டிய போதும் அதற்கு மேலதிகமாக வாரம் ஒன்றுக்கு 42 மணித்தியாலங்கள் குறைக்கப்படாமல் 2007 ஆம் ஆண்டு முதல் புகையிர சாரதிகளுக்கு மேலதிக நேரம் கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. | எதிர்காலத்தில் தகவல்களை அறிக்கை இட்டு நடவடிக்கை எடுக்கப்படும் என அறியத்தருகின்றோம். | தாபன விதிக் கோவை ஏற்பாடுகள் மற்றும் புகையிரத பொது முகாமையாளரின் சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | இலங்கை சனநாயக | 2,600,000 | 2013 மே 04 ஆம் திகதி விபத்துக்கு | ஐயவினாவில் குறிப்பிடப்பட்ட | நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் |

| | | | | |
|---|---|---|---|---|
| | சோசலிச குடியரசின் நிதிப்பிரமாணக் கோவையின் நிதிப்பிரமானம் 104 | உட்பட்ட PE-3701 என்ற கப் வண்டியின் பழுது பார்த்தல் செலவினம் ரூபா 2,600,000 ஆக இருந்ததுடன் அதன் ஆரம்ப விசாரணை அறிக்கை சமர்ப்பிக்கப்படாது இருந்ததுடன் 2017 சனவரி 29 ஆம் திகதி திடீர் விபத்துக்கு உட்பட்ட NA-8168 என்ற வான் வண்டி விபத்துக்கு உட்பட்டு 06 வருடங்கள் கடந்திருந்த போதிலும் இந்த நட்ட இழப்பு தொடர்பாக நிதிப்பிரமாணம் 104 இன் பிரகாரம் விபத்து தொடர்பான பரிசோதனைகள் நடாத்தப்பட்டிருக்க வில்லை. | விடயங்கள் தொடர்பில் விசேட கவனம் செலுத்தி விரைவாக மிகுதி நடவடிக்கைகளை எடுக்குமாறு உரிய உத்தியோகத்தர்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது என அறியத்தருகின்றோம். | நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (இ) | 2009 ஏப்ரல் 16 ஆம் திகதிய இலக்கம் 09/2009 என்ற அரச நிருவாக சுற்றறிக்கை | புகையிரத திணைக்களத்தால் சாரதிகளின் வருகை கைவிரல் அடையாள இயந்திரங்களில் குறிப்பிடுவதற்கு தேவையான நடவடிக்கைகள் வழங்கப்பட்டிருக்க வில்லை. கைவிரல் இயந்திரம் பயன்படுத்தாமல் வருகை மற்றும் வெளிச் செல்கை பதிவேடுகளில் குறிப்பிடும் நிலமை போலியான மேலதிக நேரக் கணிப்பீட்டுக்கு அடிப்படைக் காரணமாக இருந்தது. | எதிர்காலத்தின் போது உரிய சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்குமாறு உத்தியோகத்தர்களுக்கு தெரிவிக்கப்பட்டுள்ளது என அறியத்தருகின்றோம் | அரச நிருவாக சுற்றறிக்கையின் பிரகாரம் வருகை கைவிரல் அடையாள இயந்திரம் மூலம் குறிப்பிடப்படல் வேண்டும். |

## 2.5 முறையற்ற கொடுக்கல் வாங்கல்கள்

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | பிரதான இயந்திரப் பொறியியலாளர் உப திணைக்களத்தின் புகையிரத எஞ்சின் மற்றும் புகையிரத மேடைகளை பழுதுபார்க்கின்ற பதவியணியினருக்காக 1993 மே 01 முதல் சம்பளத்தில் 100 சதவீத உச்ச அளவு வரை கொடுப்பனவுகள் செய்யும் ஊக்குவிப்புத் திட்ட முறைமை 2000 செப்தெம்பர் 21 ஆந் திகதிய அமைச்சரவைத் தீர்மானத்தின் பிரகாரம் 2000 செப்தெம்பர் முதல் சம்பளத்தில் 75 சதவீதம் வரை திருத்தப்பட்டிருந்தது. அது தொடர்பான அவதானிப்புக்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன. | | |
| (i) | 2000 பெப்ரவரி முதல் 2002 ஒக்தோபர் வரையான 25 மாத காலத்தில் சம்பளத்தில் 100 சதவீத உச்ச அளவு வரை ஊக்குவிப்புப் படி செலுத்தப்பட்டிருந்ததுடன் 2002 நவம்பர் முதல் 2004 நவம்பர் வரை காணப்பட்ட மாதாந்த சம்பளத்தில் 75 சதவீதத்தில் ஆகக் கூடியது வரையும் 2004 திசெம்பர் முதல் 2023 திசெம்பர் வரை 2004 நவம்பர் மாத சம்பளத்தை அடிப்படையாகக் கொண்டு எந்த ஒரு அங்கீகாரமும் இன்றி கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. | 2000 ஆம் ஆண்டு முதல் பதிவேடுகள் பரீட்சித்து அறிக்கை ஒன்றைத் தயாரித்து சமர்ப்பிக்குமாறு உத்தியோகத்தர்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளதுடன் தகவல் கிடைத்த பின்னர் பதில் அளிக்கப்படும் என அறியத்தருகின்றோம். | ஊக்குவிப்புப் படி செலுத்துதல் பிரமாணங்களின் பிரகாரம் உரிய அங்கீகாரத்தின் அடிப்படையில் மேற்கொள்ளப்படல் வேண்டும். |
| (ii) | அமைச்சரவை தீர்மானத்தின் பிரகாரம் அரச நிருவாக உள்நாட்டு அலுவலகள் மற்றும் பெருந்தோட்ட கைத்தொழில் அமைச்சினதும், திறைசேரியின் பிரதிநிதிகளை உள்ளடக்கிய குழு ஒன்றினால் உரிய முன்மொழிவுகள் அங்கீகரிக்கப்படும் வரை இந்த ஊக்குவிப்புப் படி செலுத்துதல் அங்கீகரிக்கப்பட்டிருந்தது. அமைச்சரவை அங்கீகாரம் கிடைத்து கணக்காய்வு சந்தர்ப்பம் வரையும் 23 அளவிலான காலம் கடந்திருந்த போதிலும் இதுவரை இந்த ஊக்குவிப்புப் படி முறைமையை மீண்டும் மீளாய்வு செய்து அங்கீகரித்துக் | உடன்படிக்கையில் குறிப்பிடப்பட்ட விடயங்கள் தொடர்பாக இணங்குவதுடன் எதிர்காலத்தில் ஊக்குவிப்பு படி முறைமையை மீளாய்வு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | ஊக்குவிப்பு படி திட்டத்தை மீளாய்வு செய்து அங்கீகரித்துக் கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும் |

| | | | |
|---|---|---|---|
| | கொள்வதற்கு புகையிரதத் திணைக்களம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | | |
| (iii) | அமைச்சரவை குறிப்பு 4.1.9 இன் பிரகாரம் மற்றும் 50/2000 சுற்றறிக்கையின் 8.10 இன் பிரகாரம் ஊக்குவிப்புப் படி முறைமையின் கீழ் நலம் பெறுகின்ற பதவியணியினருக்கு மேலதிக நேரப்படி செலுத்த முடியாதிருந்த போதிலும் ஒவ்வொரு தொழிற்சாலைகளிலும் சேவைக்காக மாதம் ஒன்றுக்கு 240 மணித்தியாலத்தை விஞ்சிய மேலதிக நேரப்படி செலுத்தப்பட்டிருந்தது. | ஐயவினாவில் குறிப்பிடப்பட்ட விடயங்களில் இணங்குவதுடன் ஊழியர் வெற்றிடங்கள் தொடர்ச்சியாக அதிகரித்துச் சென்றமை மற்றும் போக்குவரத்து நடவடிக்கைகளை நல்ல நிலைமைக்கு கொண்டு வருவதற்காக பதவியணியனர் மேலதிக நேர சேவையில் ஈடுபடுத்த வேண்டி ஏற்பட்டிருந்தது என அறியத்தருகின்றோம். | ஊக்குவிப்புப் படி சுற்றறிக்கைக்கு இணங்க நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (iv) | இந்த படி முறைமையை அமுல்படுத்துகின்ற தொழிற்சாலைகளில் பூர்த்தி இலக்கு ஒவ்வொரு ஆறு மாதங்களுக்கும் ஒரு தடவை மீளாய்வு செய்து திருத்தப்பட வேண்டியிருந்த போதிலும் 36 தொழிற்சாலைகளில் ஊக்குவிப்புப் படி இலக்கு 01 வருடத்திற்கும் 28 வருடங்களுக்கும் இடையிலான கால வீச்சில் இருந்து திருத்தப்பட்டிருக்கவில்லை. | ஏற்றுக் கொள்கின்றோம். எனினும் பதவியணியினர் பற்றாக்குறையின் அடிப்படையில் இலக்குகளைத் திருத்துதல் இடம்பெறாது இருந்ததை அறியத்தருகின்றோம். | ஊக்குவிப்புப் படி சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 2.6 வங்கிக் கணக்கு செயற்பாடுகள்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| (அ) **<u>வைப்புச் செய்யப்பட்ட போதும் தீர்த்து வைக்கப்படாத பெறுவனவுகள்</u>** | | |
| வங்கிக் கணக்கு இலக்கம் 176100129027313 இல் வைப்புச் செய்யப்பட்டு ஓய்வு பெறச் செய்யப்படாத பெறுமதி ரூபா 1,178,838 ஆக இருந்ததுடன் 2023 திசெம்பர் 31 ஆந் திகதி வரையில் இந்தக் காசோலைகள் வைப்புச் செய்யப்பட்டு 20 நாட்களை விஞ்சியிருந்ததுடன் நிதிக் கூற்றுக்கள் பரீட்சிக்கின்ற 2024 ஏப்ரல் மாதம் வரையிலும் அவை தீர்த்து வைக்கப்பட்டிருக்கவில்லை. | 2024 ஏப்ரல் மாதம் 30 ஆம் திகதி வரையில் தீர்த்து வைக்கப்படாத பெறுவனவுகளில் ரூபா 8,517,909 தீர்த்து வைக்கப்பட்டுள்ளதுடன் மேலும் ரூபா 1,178,838 எதிர்காலத்தில் தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | தீர்க்கப்படாத மீதிகளை மிகவும் விரைவாக தீர்த்து வைத்தல் வேண்டும். |
| **(ஆ) இனங்காணப்படாத நேரடி வைப்புக்கள்** | | |
| கணக்கு இலக்கம் 176100129027313 இல் 2023 ஆம் ஆண்டில் ஒக்தோபர், நவம்பர் மற்றும் திசெம்பர் மாதங்களில் இனங்காணப்படாத 104 நேரடி வைப்புக்களின் பெறுமதி ரூபா 60,849,184 ஆக இருந்ததுடன் அவற்றை இனங்கண்டு தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை | பதிலளிக்கப்படவில்லை. | நேரடி வைப்புக்களை இனங்கண்டு தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

எடுக்கப்பட்டிருக்கவில்லை. இந்த இனங்காணப்படாத நேரடி வைப்புக்களின் பெறுமதி வங்கி இணக்கக் கூற்றின் ரூபா 62,295,383 ஆக காண்பிக்கப்பட்டிருந்தது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயலாற்றல்

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | கால அட்டவணையின் பிரகாரம் 1865 ஆம் ஆண்டில் இருந்தே புகையிர ஓட்டம் ஆரம்பிக்கப்பட்டிருந்த போதிலும் இதுவரை கால அட்டவணையின் பிரகாரம் புகையிரதம் ஓடாதிருந்ததாக புகையிரதப் பயணிகளிடமிருந்து முறைப்பாடு கிடைக்கப்பெற்றுள்ளது. 2023 ஆம் ஆண்டின் போது திட்டமிடப்பட்ட மொத்த புகையிர ஓட்ட தடவைகளின் எண்ணிக்கை 122,426 ஆக இருந்ததுடன் அதில் குறித்துரைத்த நேரத்தில் ஓடப்பட்டிருந்த மொத்த புகையிரத தடவைகளின் எண்ணிக்கை 36,771 ஆகும். இரத்துச் செய்யப்பட்ட மொத்த புகையிர தடவைகளின் எண்ணிக்கை 10,531 ஆகும். அதன் பிரகாரம் 70 சதவீதமான புகையிரதங்கள் குறித்துரைத்த பிரகாரம் ஓடியிருக்கவில்லை. அதில் திட்டமிடப்பட்ட பிரயாணிகள் ஓட்ட தடவைகளின் எண்ணிக்கை 113,759 இல் குறித்துரைத்த நேரத்தில் பிரயாணிகள் போக்குவரத்தில் 36,053 எண்ணிக்கை மாத்திரமே ஓடி இருந்தது. அது 32 சதவீதம் ஆக இருந்தது. | பதிலளிக்கப்பட வில்லை. | புகையிரதத்தை குறித்துரைத்த நேரத்தில் ஓடுவதற்கும் புகையிரதத்தை இரத்துச் செய்தலை தவிர்த்துக் கொள்வதற்கும் தேவையான நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |
| (ஆ) | நீண்ட காலம் முதல் இலங்கையின் ஒட்டுமொத்த பிரயாணிகள் போக்குவரத்தில் 06 சதவீதம் மற்றும் பொருள் போக்குவரத்தில் 6.5 சதவீத பங்களிப்பை வழங்குகின்ற புகையிர | பதிலளிக்கப்பட வில்லை. | புகையிரதத்தின் போக்குவரத்துப் பங்களிப்பை அதிகரித்துக் கொள்வதற்கு |

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|---|
| | சேவை அதன் பங்களிப்பை கட்டியெழுப்புவதற்கு தவறியிருந்ததுடன் 1934 ஆம் ஆண்டின் போது புகையிரத வலையமைப்புக்களில் 1521 கிலோமீற்றர் ஆக இருந்த போதிலும் தற்போது வரையில் அது கிலோமீற்றர் 1465 வரை 56 கிலோமீற்றர் இனால் குறைவடைந்திருந்தது. அந்த குறைவடைவு பெலியத்த வரையான கிலோமீற்றர் 32 புதிதாக சேர்க்கப்பட்டதன் பின்னராக இருந்தது. | | நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (இ) | இந்திய கடன் வரிசை உடன்படிக்கையின் கீழ் கடன் உதவியின் பிரகாரம் மாகோ – அநுராதபுரம் - ஓமந்தை வரை புகையிர வீதிகளை அபிவிருத்தி செய்யும் செயற்திட்டம் 2022 நவம்பர் 28 ஆம் திகதி வரையில் பூர்த்தி செய்ய வேண்டியிருந்த போதிலும் அத்திகதியில் செயற்திட்டத்தின் பௌதீக செயல் முன்னேற்றம் 35 சதவீதம் ஆளவில் நலிவான மட்டத்தில் காணப்பட்டது. அநுராதபுரம் - வவுனியா ஓமந்தை வீதியின் ஒரு பகுதியை நிர்மாணித்தல் 2023 சனவரி முதல் மேற்கொள்ளப்படுவதுடன் மாகோ அநுராதப்புரப் பகுதியின் நிர்மானங்கள் 2023 திசெம்பர் வரையிலும் ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை. 2023 திசெம்பர் 31 ஆந் திகதி வரையில் மொத்த செயற்திட்டத்தின் பௌதீக செயல் முன்னேற்றம் 69 சதவீதம் மாத்திரமாக இருந்ததுடன் இந்த செயற்திட்டத்தின் நிர்மாணம் 2023 ஆம் ஆண்டின் போதும் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை. | 2019.07.18 ஆந் திகதி கணக்கீடு செய்யப்பட்டிருந்த போதிலும் 2020 கொவிட் தொற்று நோய் நிலைமையில் ஏற்பட்ட சில நெருக்கடியான நிலைமை மற்றும் பிற்பட்ட காலப்பகுதியில் டொலர் பற்றாக்குறை மற்றும் அதன் மூலம் ஏற்பட்ட டீசல் வழங்குதலில் வசதியீனத்தின் அடிப்படையில் தாமதம் அடைந்திருந்தது. முதலாவது கட்டம் பூர்த்தி செய்யப்பட்டுள்ளது டன் இரண்டாவது கட்டம் 2024 சனவரியில் வேலை ஆரம்பிக்கப்பட்டுள் ளது. | திட்டமிடலின் பிரகாரம் தரமாக செயற்திட்டத்தைப் பூர்த்தி செய்து மக்கள் போக்குவரத்துக்கு வீதிகள் திறக்கபடல் வேண்டும். |

### 3.2 பணிப்பொறுப்புக்கள் நிறைவேற்றப்படாமை

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| அவுஸ்ரேலிய உதவியின் கீழ் யூரோ 16,600,000 ஆன களணி | அவுஸ்ரேலிய கடன் உதவியின் கீழ் இந்த | மிகவும் விரைவாக சாத்தியவள |

| | | |
|---|---|---|
| பழைய புகையிரதப் பாலத்தை நிர்மாணித்தல் மற்றும் சகல பணிகளையும் பூர்த்தி செய்து (Turnkey) மீளமைத்தல் செயற்திட்டத்தின் பிரகாரம் பேராதனைப் பல்கலைக்கழகத்தின் மூலம் 2002 ஆம் ஆண்டின் போது மேற்கொள்ளப்பட்ட சாத்தியவள ஆய்வு அறிக்கையின் பிரகாரம் இந்த பாலம் 2022 ஆம் ஆண்டு வரையிலும் பயன்படுத்தக் கூடியதாக அறிக்கையிடப்பட்டிருந்தது. பாலம் எதிர்வரும் ஆண்டு அல்லது இரண்டு ஆண்டுகளில் கட்டாயமாக அகற்ற வேண்டியிருந்ததாகவும் அதற்காக புகையிரத திணைக்களம் அல்லது போக்குவரத்து அமைச்சு எந்த ஒரு நடவடிக்கையும் எடுக்க வேண்டிய நடவடிக்கைகள் தொடர்பாக முன் ஆயத்தங்கள் செய்யாதிருந்ததுடன் சாத்தியவள ஆய்வும் மேற்கொண்டிருக்கவில்லை. | பாலத்தை மீண்டும் மறுசீரமைப்பதற்காக Turnkey செயற்திட்டம் ஒன்று அமுல்படுத்தப்பட்டதுடன் அதற்காக அவுஸ்ரேலிய வங்கி ஊடாக தேவையான சலுகைக் கடன் வழங்குவதற்காக இணக்கம் தெரிவிக்கப்பட்டிருந்தது. இதற்கான கேள்வி கோரப்பட்டதுடன் ஒரு நிறுவனம் மாத்திரம் கேள்வி சமர்ப்பித்திருந்தது. எனினும் அந்ந நிறுவனத்துடன் கலந்துரையாடி யூரோ 16.8 மில்லியன் வரை மதிப்பீடு செய்யப்பட்ட மதிப்பீட்டு செலவினத்தைக் குறைத்து உடன்படிக்கை கைச்சாத்திடுவதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளது என அறியத்தருகின்றோம். | ஆய்வினை மேற்கொண்டு பாலத்தை மீண்டும் மறுசீரமைப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

**3.3 பிரதான பணிகளுக்கு முரணான செயற்பாடுகள்**

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| 2022 ஆம் ஆண்டில் இடைக்கால வரவு செலவுத் திட்ட நிதியேற்பாட்டின் மூலம் இலங்கை புகையிரதத் திணைக்களத்திற்கு ‘‘புகையிரத்தில் மரக்கறி போக்குவரத்து’’ இற்காக ரூபா 200 மில்லியன் தொகை 2022 செப்தெம்பர் 09 ஆந் திகதி திறைசேரி செயலாளரால் வழங்கப்பட்டிருந்ததுடன் அந்த தொகையில் ரூபா 198,790,847 செலவில் 05 புகையிரதப் பெட்டிகள் பழுது பார்க்கப்பட்டிருந்தது. எனினும் அந்த செயற்திட்டம் அமுல்படுத்தாமையின் காரணமாக அந்த மொத்த செலவினம் பயனற்ற செலவினத்திற்கு உட்பட்டிருந்ததுடன் 04 உப திணைக்களங்களுக்காக மரக்கறி போக்குவரத்து தொடர்பான | இந்த செயற்திட்டத்திற்காக ஒதுக்கப்பட்ட தொகை தற்போது புகையிரதத் திணைக்களத்தின் அபிவிருத்திக்கு நீண்ட கால ரீதியாக தாக்கமளித்த பணிகளுக்காக செலவிடப்பட்டிருந்தமையினால் அந்த செலவினங்கள் மரக்கறிப் போக்குவரத்துக்கு மேற்கொள்ளப்படாதிருந்த போதிலும் புகையிரத போக்குவரத்தில் இடப்பட்ட கிரயம் ஒன்றாக இருந்தமையால் பயனற்ற செலவினமாக கருத முடியாதுள்ளது என அறியத் தருகின்றோம். | சரியான நோக்கங்கள் இன்றி அரசாங்கத்தின் விளைவற்ற நடவடிக்கைகளுக்காக ஈடுபடுத்துவதற்கு ஆலோசனை மற்றும் அங்கீகாரம் வழங்கிய உத்தியோகத்தர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

நடவடிக்கைகளுக்காக வழங்கப்பட்ட நிதி ஏற்பாடுகளில் 03 உப திணைக்களங்களில் ரூபா 96,956,246 ஆன நிதியேற்பாடு நோக்கங்களுக்கு முரணாக செலவிடப்பட்டிருந்ததுடன் அது 49 சதவீதத்தைக் கொண்டிருந்தது.

### 3.4 எதிர்பார்க்கப்பட்ட பூர்த்தி மற்றும் பெறப்படாமை

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | | | |
| (i) | இரத்மலானை புதிய இயந்திரப் பொறியியலாளர் அலுவலகத்தால் தயாரிக்கப்பட்ட 2023 ஆம் ஆண்டின் செயல் நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் ஒக்தோபர் மாதம் வரையில் wagon 83 பழுதுபார்க்கப்பட வேண்டிய போதும் பழுதுபார்க்கப்பட்ட wagon இன் எண்ணிக்கை 35 ஆகும். இந்த செயலாற்றல் 42 சதவீதம் ஆன குறைந்த மட்டத்தில் காணப்பட்டமைக்கு மேற்பார்வை நடவடிக்கைகள் நலிவான நிலையில் காணப்பட்டமையும் அவதானிக்கப்பட்டது. முதலாவது 10 மாத காலத்தில் இந்த wagon இன் பழுதுபார்த்தல் நடவடிக்கையில் ஈடுபடுகின்ற 269 உத்தியோகத்தர்கள் (அண்ணளவாக) இருவருக்கு சம்பளம் மற்றும் படிகளுக்கு மேலதிகமாக ரூபா 3,480,188 ஊக்குவிப்புப் படியும் மேலதிக நேரம் 645,600 மணித்தியாலங்கள் மேலதிக நேரப் படியும் செலுத்தப்பட்டிருந்தது. | செயல் நடவடிக்கைத் திட்டத்தில் காண்பிக்கப்பட்டுள்ள இலக்குகளுக்கு மேலதிகமாக பயிற்சிபெற்ற ஊழியத்தின் பற்றாக்குறை மற்றும் பொது மக்களுக்கு உரிய நேரத்தில் தேவையான புகையிரதப் பெட்டிகள் மற்றும் எஞ்சின்களை பழுதுபார்த்து வழங்குதல் என்பவற்றை தொடர்ச்சியாக மேற்கொள்வதற்கு தேவையாக இருந்தமையால் விசேட செயற்திட்டத்தை நிறைவேற்றுதல் தொடர்பாகவும் படிகள் மற்றும் மேலதிக நேரப் படிகள் செலுத்துவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தது என அறியத்தருகின்றோம். | மேற்பார்வை நவடிக்கைகளை முறைப்படுத்தி செயலாற்றலைக் கட்டியெழுப்ப வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ii) | புகையிரதப் பெட்டிகளை நவீனமயப்படுத்தல் / பழுதுபார்த்தல் போன்ற நடவடிக்கைகள் பிரதானமாக 04 தொழிற்சாலைகளில் மேற்கொள்ளப்படுவதுடன் 2023 ஆம் ஆண்டின் போது செயல் நடவடிக்கைத் திட்டத்தில் ஆண்டின் முதல் 10 மாத இறுதி வரையில் திட்டமிடப்பட்ட பெரிய (major) 83 பழுதுபார்த்தல்கள் மேற்கொள்ள வேண்டியிருந்த போதிலும் உள்ளபடியான பழுதுபார்த்தல்களின் எண்ணிக்கை 16 ஆனமையால் அது 20 சதவீதம் அளவில் காணப்பட்டது. | 2023 ஆம் ஆண்டின் செயல் நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் கீழே குறிப்பிடப்படுகின்ற பழுதுபார்த்தல்கள் மேற்கொள்ளப்பட்டிருந்தது என அறியத்தருகின்றோம்.<br><br>புகையிரதப் பெட்டிகள் - பாரிய அளவிலான பழுது பார்த்தல் - 67 சதவீதம்<br><br>புகையிரப் பெட்டிகள் - சிறிய அளவிலான பழுது பார்த்தல் 93 சதவீதம் | ஆண்டின் செயல் நடவடிக்கைத் திட்டத்தில் வழங்கப்பட்டுள்ள இலக்குகளை அடைந்து கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 3.5 செயற்திட்டங்களை நிறைவேற்றுவதில் தாமதம்

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | **<u>மாகோ – ஓமந்தை புகையிரத வீதி அபிவிருத்தி செயற்திட்டம்</u>**<br>மாகோ - ஓமந்தை புகையிரத வீதி செயற்திட்டத்திற்கு இணையாக புகையிரதத் திணைக்களத்தின் மூலம் பூ ஓய புகையிரத நிலையம் மற்றும் இரண்டு மேடைகளை நிர்மாணித்தல் ரூபா 47,178,896 மதிப்பீட்டின் அடிப்படையில் 2022 ஏப்ரல் முதல் வேலை ஆரம்பிக்கப்பட்டிருந்த போதிலும் அங்கீகரிக்கப்பட்ட மதிப்பீட்டில் வேலை விடயம் மற்றும் மதிப்பீடு செய்யப்பட்ட தொகை பின்னர் மாற்றுவதற்கு ஒத்ததாக மதிப்பீடு திருத்தப்பட்டிருக்கவில்லை.<br>அநுராதபுரம் - ஓமந்தை புகையிரத வீதி அபிவிருத்தி நடவடிக்கைகள் பூர்த்தி செய்யப்பட்டு 2023 யூலை 15 ஆம் திகதி முதல் புகையிரதத்தின் ஓட்ட | மதவாச்சி மற்றும் வவுனியாவிற்கு இடையே பூஓயா புதிய புகையிரத நிலைய நிர்மாணம் மாகோ – ஓமந்தை புகையிரத வீதி அபிவிருத்தி செயற்திட்டத்தின் கீழ் அல்லாமல் இலங்கை புகையிரதத் திணைக்களத்தின் மூலம் மேற்கொள்ளப்படுகின்ற நிர்மாணம் ஆகும். பூ ஓய புதிய புகையிரத நிலையத்தின் கட்டிடம் மற்றும் முதலாவது மேடை நிர்மாணிக்கும் நடவடிக்கைகள் 100 சதவீதம் பூர்த்தி செய்யப்பட்டுள்ளது. எனினும் அந்த புகையிரத நிலையத்தை பயன்படுத்துவதற்கு சமிக்ஞை முறைமையின் செயற்பாடுகள் இதுவரை பூர்த்தி செய்யப்படாமையே காரணமாக | இரண்டு மேடைகளும் நிர்மாணிக்கப்பட்டு பிரயாணிகள் போக்குவரத்து வசதிகளை வழங்குவதற்காக புகையிரத நிலையத்தை திறந்து வைப்பதற்கு நடவடிக்கை எடுக்காதிருந்தமை முகாமைத்துவ நலிவாக இருந்ததுடன் மிகவும் விரைவாக பொதுமக்களுக்கு இந்த புகையிரத நிலையத்தை திறந்து |

| | | | |
|---|---|---|---|
| | நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டிருந்த போதிலும் இரண்டாவது மேடை நிர்மாண நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை. இந்த புகையிரத நிலைய நிர்மாணத்தலின் பிரதான நோக்கமாக இரண்டு புகையிரதங்களை மாற்றுவதற்காக மதவாச்சி மற்றும் வவுனியா புகையிரத நிலையங்களுக்கு இடையே வேறொரு நிலையம் ஒன்று காணப்படாதிருந்தமையின் அடிப்படையில் அந்த இரண்டு புகையிரத நிலையங்களுக்கும் இடையே காணப்படுகின்ற கிலோமீற்றர் 23 தூரத்தை குறைக்கின்ற பூஓயா புகையிரத நிலையத்தில் இரண்டு புகையிரதங்கள் மாறிச் செல்வதற்கு இடமளித்து புகையிரதத் தாமதத்தைக் குறைப்பதாக இருந்த போதிலும் புகையிரத வீதி நிர்மாணித்து புகையிரதம் ஓட்டத்திற்கு திறக்கப்பட்ட போதும் இந்த புகையிரத நிலையத்தின் மேடைகள் நிர்மாணித்தலில் தாமதம் மற்றும் புகையிர நிலையத்தின் செயற்பாட்டு நடவடிக்கைகள் ஆரம்பிக்காமை செயற்திட்டத்தின் நோக்கத்தை நிறைவேற்றுவதற்கு இடையூறாக இருந்தது. | இருந்தது. | வைப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | ரூபா 24,860,100 மதிப்பீட்டுப் பெறுமதியில் தற்போது அளவுப் புகையிரத நிலையத்திற்குப் பதிலாக புதிய புகையிரத நிலையம் ஒன்றை நிர்மாணிப்பதற்கான நடவடிக்கைகள் 2018 ஆம் ஆண்டின் போது ஆரம்பிக்கப்பட்ட போதும் அந்த புகையிரத மேடையின் வேலை நடவடிக்கைகள் மாத்திரம் இது வரையில் தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ளது. | தற்போது புகையிரதத் தளத்தில் மண் நிரப்பும் நடவடிக்கைகள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளதுடன் மேல் மற்றும் கீழ் மேடைகள் நிர்மாணிக்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றது. மேல் வீதியின் மேடையில் நிர்மாண நடவடிக்கைகள் 2024 மே மாதம் பூர்த்தி செய்வதற்கும் கீழ் வீதியின் மேடை நிர்மாணித்தல் நடவடிக்கைகள் இந்த ஆண்டில் பூர்த்தி செய்வதற்கும் எதிர்பார்க்கப்பட்டுள்ளது. | பிரயாணிகளுக்கு வசதியீனம் ஏற்படுவதைத் தடுப்பதற்காக விரைவாக புதிய நிலையத்தை நிர்மாணிக்கும் நடவடிக்கைககளைப் பூர்த்தி செய்தல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| | | 2022 ஆம் ஆண்டின் போது புதிய நிலைய நிர்மாணம் ஆரம்பிக்கப்பட்டதுடன் முன்னர் காணப்பட்ட கட்டிட திட்டம் திருத்தப்பட்டு 2023 திசெம்பர் மாதத்தில் தொல் பொருளியல் திணைக்களத்தின் அங்கீகாரத்தைப் பெற்று பழைய கட்டிடத்தின் பகுதிகளை மறுசீரமைக்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றது. தற்போது முதலாவது மாடியின் வேலைகள் நிறுத்தப்பட்டுள்ளதுடன் பழைய கட்டிட மறுசீரமைப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றது. |

**3.6 நிதி விடுவிக்கப்பட்ட போதும் செயல்முன்னேற்றத்தைப் பெறாத செயற்திட்டங்கள்**

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| 2023 ஆம் ஆண்டிற்காக கிழக்கு மாகாண பொறியியலாளருக்கு நிதியேற்பாடு ஒதுக்கப்பட்டிருந்த புதிய 13 வேலை செயற்திட்டங்களில் ரூபா 6,700,000 ஆன 06 செயற்திட்டங்கள் 2023 ஆம் ஆண்டில் ஆரம்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை. | பதிலளிக்கப்படவில்லை | மதிப்பீடு செய்யப்பட்ட செயற்திட்டங்களை கால ரீதியில் பூர்த்தி செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

**3.7 வருடாந்த செயலாற்றல் அறிக்கை**

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 16(2) பிரிவு மற்றும் இலக்கம் 02/2020 என்ற 2020 ஆகஸ்ட் 28 ஆந் திகதிய அரச நிதி சுற்றறிக்கையின் 10.2 ஆம் பந்தியின் பிரகாரம் வருடாந்த நிதிக்கூற்றுக்களுடன் சமர்ப்பிக்க | பதிலளிக்கப்படவில்லை | சட்டங்கள் மற்றும் பிரமானங்களின் பிரகாரம் குறித்துரைத்த திகதியில் அறிக்கை சமர்ப்பிக்கப்படல் வேண்டும். |

வேண்டிய வருடாந்த செயலாற்றல் அறிக்கை நிதிக்கூற்றுக்களுடன் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

### 3.8 பெறுகைகள்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| கோவை இலக்கம் SRSF/ 7828 மூலம் Track Ballast கொள்வனவு செய்யும் போது கூறுவிலை மதிப்பீடு செய்யப்பட்டு தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவினதும் பெறுகைக் குழுவினதும் பரிந்துரை பெறப்பட்டு கேள்வி கையளிப்பதற்காக 513 நாட்கள் முதல் 517 நாட்கள் வரையான காலம் எடுத்திருந்தது. கேள்வி கையளித்த கம்பனிக்கு வரைவு உடன்படிக்கை அனுப்பிய பின்னர் 103 நாட்கள் தாமதத்தின் பின்னர் உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டிருந்தது. இந்த கருங்கல் கியூப் 350.06 அளவு 2023 ஒக்தோபர் 11 ஆந் திகதி வரையும் கிடைத்திருக்கவில்லை. | பெறுகைக் குழுத் தீர்மானத்தின் படி ஒவ்வொரு வழங்குனருக்கம் கட்டளை கையளிக்கப்பட்ட பின்னர் கேள்வி நிபந்தனையின் பிரகாரம் உரிய செயலாற்றல் பிணை முறி பெறப்பட்ட பின் உடன்படிக்கை வரைவு செய்யப்பட்டு வழங்குனரின் இணக்கப்பாட்டை விசாரித்து அனுப்பட்டதுடன் உரிய இணக்கப்பாடு கிடைத்த பின்னர் உடன்படிக்கை தயாரித்து உடன்படிக்கை செய்வதற்காக தொழில்நுட்ப பிரிவிற்கு கையளிக்கப்பட்டது. லியன்வல மற்றும் மிரிஸ்வத்த என்ற புகையிரத தளங்களுக்காக கருங்கல் வழங்குவதற்குரிய காலத்தை நீடிக்குமாறு வழங்குனரால் கோரிக்கை வழங்கப்பட்டிருந்ததுடன் இந்த வழங்குனரால் 2023.11.14 ஆந் திகதி மிரிஸ்வத்த மற்றும் லியன்வல புகையிரத தளங்களுக்காக முறையே கருங்கல் கியூப் 6.42 மற்றும் 43.52 வழங்கப்பட்டிருந்தது. | பெறுகை நடைமுறைகளை மேற்கொண்டு தாமதத்தை தவிர்த்துக் கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

### 3.9 சொத்துக்கள் முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| **(அ) குறைவாகப் பயன்படுத்தப்பட்ட சொத்துக்கள்** | | |
| (i) அநுராதபுரம் மேற்பார்வை முகாமையாளர் (கட்டிடம்) இற்கு உரிய வெளிக்கள வீடுகள் (இரண்டு மாடி) 05 இற்கு உரியதாகக் காணப்பட்ட 69 அறைகளில் 23 | உத்தியோகபூர்வ இல்லங்கள் பல வருட காலங்கள் வெறுமையாகக் காணப்பட்டமையினால் உடைந்து விழுந்துள்ளது. | இந்த வீடுகளை பழுது பார்த்து பொருளாதார ரீதியில் ஆக்க பூர்வமானதாக |

| | | | |
|---|---|---|---|
| | அறைகள் 02 மாதங்கள் முதல் 15 வருடங்களும் 07 மாதங்கள் வரையான கால வீச்சில் இருந்தும், 56 பங்களா வீடுகளில் 06 வீடுகள் 05 மாதங்கள் முதல் 05 வருடங்களும் 09 மாதங்கள் வரையான கால வீச்சிலும், இரட்டை வீடுகள் 189 இல் 31 வீடுகள் 02 மாதங்கள் 12 வருடங்களும் 07 மாதங்களும் வரையிலான கால வீச்சிலும் பயன்படுத்தப்படாமல் குறைவாக பயன்படுத்தப்பட்டிருந்தது. | எனினும் போக்குவரத்து அத்தியட்சகர் (அநுராதபுரம்) இனால் இந்த உத்தியோகபூர்வ இல்லங்கள் சிலருக்கு ஒதுக்கப்பட்ட பின்னர் அதில் குடியிருப்பவர்களின் தேவையின் பிரகாரம் பழுது பார்த்தல் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றது. இந்த வீடுகள் வெற்றிடமாகக் காணப்பட்டதன் காரணமாக தொடர்ந்தும் உடைந்த நிலைக்கு உட்பட்டிருந்தது. | உள்ளதா என்பது தொடர்பாக சாத்திய வள ஆய்வினை மேற்கொண்டு அதன் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ii) | யாழ்ப்பாணம் புகையிர நிலையத்தில் அலுவலக அறை தெற்குப் பக்கத்தில் அடி 7 1/4 x 5 1/4 அளவில் அலுவலக அறையில் பகுதி இரண்டாகக் காணப்பட்டதுடன் அதில் ஒரு பகுதி எந்த ஒரு கட்டணமும் இன்றி தொலைபேசி கம்பனிக்கு வழங்கப்பட்டிருந்ததுடன் மற்றய பகுதி எந்த ஒரு பயன்பாடும் இன்றி மூடி வைக்கப்பட்டிருந்தது. | பதிலளிக்கப்படவில்லை | வெளி நிறுவனங்களுக்கு அறைகளை வாடகைக்கு அல்லது குத்தகைக்கு வழங்கும் அடிப்படையில் வழங்க வேண்டி இருந்ததுடன் அறை வசதிகளை பயன்படுத்துதல் வேண்டும். |
| (iii) | 13 ருமேனியன் புகையிரத பெட்டிகள் 2021 மே 11 ஆம் திகதி முதல் கணக்காய்வுத் திகதியான 2023 யூலை 26 ஆந் திகதி வரையிலும் அதாவது 02 வருடங்களும் 02 மாத காலமும் யாழ்ப்பாண புகையிர நிலையத்தில் எந்த ஒரு பயன்படுத்தலும் இன்றி நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது. | பதிலளிக்கப்படவில்லை | பயன்படுத்தக் கூடிய புகையிரதப் பெட்டிகளை பிரயாணிகள் போக்குவரத்திற்கு ஈடுபடுத்த வேண்டியதுடன் பயன்படுத்த முடியாத புகையிரப் பெட்டிகளை அழிவடைந்து செல்வதற்கு இடமளிக்காமல் பயன்பாடு உள்ள பணிகளில் ஈடுபடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (iv) | 04 புகையிரத நிலையங்களில் புகையிரதப் பெட்டிகள் மற்றும் 69 புகையிரத மேடைகள் பல வருட காலம் முதல் புகையிரத நிலையங்களில் நிறுத்தி வைக்கப்பட்டதுடன் அவை துருப்பிடித்து அழிவடையும் நிலைமைக்கு உட்பட்டிருந்தது. பழுது பார்க்கக் கூடிய மேடைகளை இனங்கண்டு அவற்றைப் பாதுகாப்பதற்கும், அவற்றைப் பழுதுபார்த்து சேவையில் ஈடுபடுத்துவதற்கும் தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை. | பதிலளிக்கப்படவில்லை | பழுதுபார்க்கக் கூடிய புகையிரதப் பெட்டிகளை இனங்கண்டு அவற்றைப் பாதுகாப்பதற்கும், அவற்றைப் பழுது பார்ப்பதற்கும் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (v) | தொலைபேசிக் கம்பனியின் மூலம் புகையிரதம், புகையிரத ஒழுங்குபடுத்துனர், புகையிரத சாரதி, கட்டுப்பாட்டு முறைமை, புகையிரத நிலையம், பிரதான அலுவலகம் என்ற இடங்களுக்கு இடையே சரியான தொடர்பு பேணிச் சென்று GPS தொழில்நுட்பத்தை ஈடுபடுத்தி புகையிரத பிரயாண கால அட்டவணையில் குறித்துரைத்த பிரகாரம் நடாத்திச் சென்று புகையிரத முறைமையினை செயற்திறனாக்குவதற்காக ஒவ்வொரு புகையிரத நிலையத்திற்கும் தொலைபேசி வழங்கப்பட்டிருந்தது. எனினும் குருநாகல், பொல்கஹவல புகையிரத நிலையங்களுக்கு வழங்கப்பட்டிருந்த 12 தொலைபேசிகளின் மூலம் புகையிரத நிலையங்களுக்கு இடையே தொலைபேசி அழைப்புக்களைப் பெற்றுக் கொள்ளல் மாத்திரம் இடம் பெற்றிருந்தது. | இந்த டயலொக் தொலைபேசி பயன்பாடு தொடர்பாக புகையிரத பொது முகாமையாளரினால் தேவையான ஆலோசனை மற்றும் இந்த தொலைத் தொடர்பு உபகரணங்களைப் பயன்படுத்துதல் தொடர்பான தேவையான பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்களும் சகல பிரிவுகளுக்கும் வழங்கப்பட்டுள்ளது. இந்த தொலைபேசி மற்றும் தொலைத் தொடர்பு உபகரணங்களைப் பயன்படுத்தும் போது ஏற்படுகின்ற பிரச்சனைகளைச் சரி செய்தல் உடன் படிக்கையின் பிரகாரம் உரிய வழங்குனர் நிறுவனத்தில் இருந்தே மேற்கொள்ளப்பட்டது. | இந்த தொலைபேசி முறைமையை செயற்திறனாகவும் வினைத்திறனாகவும் பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (vi) | 05 புகையிரத நிலையங்களுக்கு இணைந்ததாக உள்ள 132 அரசாங்கத்தின் வீடுகளில் எந்த ஒருவரும் குடியிருக்காமல் வெற்றிடமாகக் காணப்பட்டதுடன் இதில் குடியிருப்பதற்கு தேவையான அடிப்படை வசதிகள் ஆன நீர், | பதிலளிக்கப்படவில்லை | குடியிருப்பதற்கு தேவையான அடிப்படை வசதிகளை பூர்த்தி செய்து இந்த அரசாங்கத்தின் வீடுகளை |

| | | | |
|---|---|---|---|
| | மின்சாரம் காணப்படாத பல வீடுகளும் காணப்பட்டன. | | பயன்படுத்துதல் வேண்டும். |
| (vii) | பொல்கஹவெல கட்டிடம் பரீட்சகர் அலுவலகத்தில் இருப்பு களஞ்சியத்தில் பயன்படுத்தப்படாத 05 இயந்திர உபகரணங்கள் மற்றும் நீண்ட காலம் முதல் பயன்படுத்தப்படாத 34 இருப்பு விடயங்கள் என்பன காணப்பட்டன. | இதில் குறிப்பிடப்பட்ட இயந்திர உபகரணங்கள் யாவும் தற்போது செயலிழந்த நிலையில் உள்ளது. பழுது பார்க்கக் கூடிய உபகரணங்களை பழுது பார்ப்பதற்காக தேவையான ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. காலாவதியான பயன்படுத்த முடியாத விடயங்களும் இதில் உள்ளடங்கி உள்ளது.<br><br>GI Pipe பதிலாக PVC Pipe பயன்படுத்தப்பட்ட போதும் சில நிலையங்களில் இன்னும் GI Pipe காணப்படுகின்றமையினால் அதற்கான தேவை ஏற்படக் கூடியதாக இருந்தமையால் அந்தப் பொருட்கள் களஞ்சியத்தில் வைக்கப்பட்டுள்ளது. | இயந்திர உபகரணங்களைப் பழுது பார்த்து மீண்டும் பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டி இருந்ததுடன் பயன்படுத்தப்படாத இருப்புக்கள் உரிய பிரகாரம் விற்றுத் தீர்க்கப்படல் வேண்டும். |

**(ஆ) காணி வாடகைக்கு வழங்குதல்**

| | | | |
|---|---|---|---|
| (i) | கம்பஹா மாவட்டத்தில் நீரிகமவில் அமைந்துள்ள LB 3451 மற்றும் உரித்துறுதி இலக்கம் 35748 இற்குரிய காணி தொடர்பாக 1976 – 1990 வரையான காலத்தின் போது 01 றூட் 08 பேர்ச் காணியில் ஒரு பகுதியாகவும் 1991 – 1995 வரையான காலத்தில் 12.5 பேர்ச் காணிப் பகுதி ஒன்றாகவும் 2000 – 2010 வரையான காலத்தில் 31.8 பேர்ச் காணி பகுதியாகவும் பல்வேறு காணி அளவுகளுக்காக உடன்படிக்கை செய்யப்பட்டிருந்தது. 2010 திசெம்பர் 31 இன் பின்னர் அதாவது கணக்காய்வுத் திகதியான 2023 செப்தெம்பர் 13 ஆம் திகதி வரை 12 வருடங்களும் 08 மாத | பதிலளிக்கப்படவில்லை | வாடகை உடன்படிக்கையை நாளது வரையாக பேணிச் செல்ல வேண்டியிருந்ததுடன் அதன் பிரகாரம் வாடகை அறவிடல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | காலம் வரையும் வாடகை உடன்படிக்கை ஒன்று விநியோகிக்கப்பட்டிருக்கவில்லை. | | |
| (ii) | கண்டி மாவட்டத்தில் நாவலப்பிட்டி, மட்டக்களப்பு மாவட்டத்தில் ஓட்டமாவடி மற்றும் கம்பஹா மாவட்டத்தில் ராகம இல் அமைந்துள்ள கூட்டுமொத்தமான 02 ஏக்கர் 01 றூட் 35.16 பேர்ச் அளவான 03 காணிக் கூறுகளை வாடகைக்கு வழங்குவதற்குரிய வாடகை உரித்துறுதியின் மூலம் வாடகைக்கு வழங்குவதற்கான கோரிக்கை கவனத்தில் கொள்வதற்காக 01 – 07 வருடங்கள் வரையிலான தாமதம் ஏற்பட்டிருந்தது. மேலும் உடன்படிக்கை இரண்டாவது வாடகைக் குழத் தீர்மானம் கிடைத்து 02 – 04 வருடங்களுக்கு இடையிலான கால தாமதத்தின் பின்னரே உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டிருந்தது. | மதிப்பீட்டு திட்டத்தின் பிரகாரம் உரிய ஆவணங்கள் பூர்த்தி செய்யப்பட்ட பின்னர் வாடகைக் குழு இரண்டினதும் அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்பட்டு மற்றும் பிரிவுக்குப் பொறுப்பான உத்தியோகத்தர் மற்றும் புகையிரத பொது முகாமையாளரின் அங்கீகாரம் பெறப்பட்ட பின்னர் உரிய நிலுவை பயன்பாட்டை பணம் செலுத்தப்பட்ட பின்னர் வாடகை உடன்படிக்கை வழங்கப்படும் என அறியத்தருகின்றோம். | வாடகை பெற்றுக் கொள்ளும் போதான செயற்பாடுகளை துரிதப்படுத்தி குறித்துரைத்த பிரகாரம் வாடகை வருமானத்தை உழைப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (iii) | பொலன்னறுவை மாவட்டத்தில் கதுறுவளையில் அமைந்துள்ள LD 33297 என்ற பிணை முறிக்கு உரிய 2.5 பேர்ச் அளவான புகையிர ஒதுக்கப் பிரதேச காணிக்காக 1983 சனவரி 03 ஆந் திகதி முதல் கணக்காய்வுத் திகதியான 2023 யூலை 10 ஆம் திகதி வரை 40 வருட வாடகை உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டிருக்கவில்லை. | இந்த பிணை முறிக்கு 2020.01.17 ஆந் திகதி இரண்டாவது வாடகைக் குழுவின் அங்கீகாரம் கிடைத்துள்ளது. அதன் பிரகாரம் நிலுவைப் பயன்பாட்டு பணம் செலுத்திய பின்னர் உடன்படிக்கை செய்வதற்காக அங்கீகாரத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. இதில் மதிப்பீட்டுக் காலம் முடிவடைந்தமையால் புதிய மதிப்பீட்டு அறிக்கை கோரி அதற்காக அவருக்கு பிணைமுறி விநியோகிப்பதற்கு உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றது என அறியத்தருகின்றோம். | வாடகை உடன்படிக்கைகளில் கைச்சாத்திட்டு வாடகை அறவிடப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (iv) | கண்டி மாவட்டத்தில் கெட்டெம்பேயில் அமைந்துள்ள LC 3589 என்ற பிணைமுறிக்கு உரிய 26 பேர்ச் காணியில் தற்காலிகமாக கொட்டகை ஒன்று நிர்மாணித்து மோட்டார் மாகாணங்களைப் பழுது பார்க்கும் நிலையம் ஒன்றாக பேணிச் செல்வதற்கும் மற்றும் பாதுகாப்பான வேலி ஒன்றை நிர்மாணித்து வாயில் கதவை இடுவதற்காக 2019 யூன் 11 ஆந்திகதி அனமதி கோரப்பட்டிருந்த போதும் அதற்காக பிரதேச வாடகைக் குழு தீர்மானம் 04 வருடங்களும் 11 மாதங்களின் பின்னரே கிடைத்திருந்ததுடன் கணக்காய்வுத் திகதியில் உள்ளவாறு ரூபா 527,994 வாடகைத் தொகையும் அறவிடப்பட்டிருக்கவில்லை. | பிரதான பொறியியலாளரின் (வீதி மற்றும் நிர்மாணம்) உரிய கடிதம் தொடர்பான விடயங்களை கண்டறிந்துள்ளதாக கோவையின் பிரகாரம் தெளிவுபடுத்தப்பட்டுள்ளதுடன் வாடகையாளரின் கோரிக்கையையும் கவனத்தில் கொண்டு புதிய திட்டம் ஒன்றைத் தயாரித்து இரண்டாவது பிரதான பொறியியலாளர் (வீதி மற்றும் நிர்மாணம்) இற்கு அறிவிக்கப்பட்டுள்ளது. | தாமதம் இன்றி குழு தீர்மானம் எடுத்து வாடகை உடன்படிக்கை செய்யப்படல் வேண்டும். |
| (v) | புகையிரத திணைக்களத்தால் இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனத்திற்கு எண்ணெய் நிரப்புவதற்காக புகையிர ஒதுக்கப் பிரதேசக் காணி வாடகைக்கு வழங்கப்பட்டிருந்ததுடன் அதற்குரிய பேலியகொட, மாத்தளை, மீரிகம் மற்றும் வத்தேகம என்ற பிரதேசங்களின் புகையிரத ஒதுக்கப் பிரதேச காணிகளை வாடகைக்கு வழங்கும் போது பின்வரும் விடயங்கள் வெளிப்படுத்தப்பட்டன. | | |
| a. | பேலியகொட ஒதுக்கப் பிரதேச காணிக்காக 1980 சனவரி 01 ஆந்திகதி முதல் 42 வருடங்களும் 05 மாத காலம் வரையும் LC 1899 ஒதுக்கப் பிரதேச காணிக்காக 1947 ஒக்தோபர் 01 ஆம் திகதியில் இருந்து 75 வருடங்களும் 05 மாதங்களும் வரையிலும், வத்தேகம ஒதுக்கப் பிரதேசக் காணிக்காக 1980 சனவரி 01 ஆம் திகதி முதல் 43 வருடமும் 05 மாத காலம் வரையும் வாடகை உடன்படிக்கைகளில் கைச்சாத்திடுதல் புறக்கணிக்கப்பட்டிருந்தது. | பதிலளிக்கப்படவில்லை | வாடகை உடன்படிக்கை நாளது வரையாகப் பேணிச் செல்ல வேண்டியிருந்ததுடன் தேவையான மதிப்பீடுகள் குறித்துரைத்த காலத்தில் மேற்கொண்டு வாடகை வருமானத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் |
| b. | மாத்தளை நகரத்தில் வாடகை உடன்படிக்கை இலக்கம் LC 1899 | | |

என்ற புகையிரத ஒதுக்கப் பிரதேச காணிக்காக 2022 – 2026 வரையான காலத்திற்காக மதிப்பீட்டு அறிக்கை கோரப்பட்டிருந்த போதும் கணக்காய்வுத் திகதியான மே 22 ஆம் திகதி வரையிலும் அந்த மதிப்பீட்டு அறிக்கை கிடைத்திருக்காமையினால் 2022 ஆம் ஆண்டுக்குரிய வாடகைப் பணம் கணிப்பீடு செய்யப்படவில்லை.

வேண்டும்.

c. மீரிகம நகரத்தில் வாடகை உடன்படிக்கை இலக்கம் LB 30037 என்ற புகையிரத ஒதுக்கப் பிரதேச காணிக்காக 2020 – 2024 வரையான காலத்திற்காக மதிப்பீட்டு அறிக்கை கோரப்பட்டிருந்த போதும் கணக்காய்வுத் திகதியான 2023 மே 22 ஆம் திகதி வரையிலும் அந்த மதிப்பீட்டு அறிக்கை பெற்றுக் கொள்ளப்படாமையினால் 2020 மற்றும் 2021 ஆம் ஆண்டுகளுக்காக உரித்தாகின்ற வாடகைப் பணம் கணிப்பீடு செய்யப்படவில்லை.

d. வத்தேகம நகரத்தில் வாடகை உடன்படிக்கை இலக்கம் LC 8420 என்ற புகையிரத ஒதுக்கப் பிரதேச காணி 1963 திசெம்பர் 29 ஆம் திகதி வரையில் வர்தமாணியின் மூலம் கையளித்தல் கட்டளையின் அடிப்படையில் இலங்கை பெற்றோலிய கூட்டுத்தபனத்திற்கு வழங்கப்பட்டிருந்த போதிலும் புகையிரத திணைக்களத்திற்கும் லங்கை பெற்றோலிய கூட்டுத்தபனத்திற்கு இடையே வாடகை உடன்படிக்கை செய்யப்பட்டிருக்கவில்லை. 1964 – 2017 ஆம் ஆண்டு வரையான காலத்திற்குரிய மதிப்பீட்டு அறிக்கை 2013 ஒக்தோபர் 24 ஆம் திகதி கோரப்பட்டமையால் 49 வருட கால தாமதம் ஏற்பட்டிருந்ததுடன் அது வரை காணியின் பெறுமதியை மதிப்பீட செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. எனினும் மதிப்பீட்டு அறிக்கை தாமதமாகிக் கோரப்பட்டதன் காரணமாக அந்த

| | | |
|---|---|---|
| காலப்பகுதிகளுக்குரிய வாடகைப் பணத்தை அறவிடுவதற்கும் முடியாமல் இருந்தது. | | |
| **(இ) விளைவற்ற சொத்துக்கள்** | | |
| கல்கமுவ புகையிரத நிலையத்திற்குரிய வேலி மற்றும் 06 குடிசை வீடுகள் மற்றும் நிரந்தர வீதி பரிசோதகர் உத்தியோகபூர்வ இல்லம், பொலிஸ் உத்தியோகபூர்வ இல்லங்கள் மேலும் வரிசை சில வீடுகள் என்பன காணப்பட்டதுடன் அந்த வரிசை வீடுகள் எவ்வளவு காணப்பட்டது என பௌதீக ரீதியில் அவதானிப்பதற்கு முடியாத முறையில் அழிவடைந்திருந்தது. | குடியிருப்பாளர்கள் இன்றி உத்தியோகபூர்வ இல்லங்கள் பல வருட காலமாக வெற்றிடமாகக் காணப்பட்டமையால் உடைந்து விழுந்திருந்தது. எனினும் போக்குவரத்து அத்தியட்சகர் (அநுராதபுரம்) இனால் இந்த உத்தியோகபூர்வ இல்லங்கள் ஏதாவது நபர்களுக்கு ஒதுக்கப்பட்ட பின்னர் அந்த குடியிருப்பாளர்களின் தேவையின் பிரகாரம் பழுது பார்த்தல் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றது. வெற்றிடமாக உள்ள வீடுகளை பழுது பார்க்கக் கூடிய அளவில் நிதி ஏற்பாடு போதியளவில் இல்லாதிருந்ததை குறிப்பிடுகின்றோம். | இந்த வீடுகளை பழுது பார்த்து குடியிருப்பதற்காக வழங்குதல் மற்றும் உரிய பிரகாரம் பராமரித்துச் செல்லப்படல் வேண்டும். |
| **(ஈ) வாகனக் கட்டுப்பாடு** | | |
| இலக்கம் 68-5023 என்ற டிரக் வண்டி 2007 மார்ச் 03 ஆந் திகதி அம்பலாங்கொடையில் தீப்பிடித்து அழிவடைந்து இருந்ததுடன் அந்த நட்டம் ரூபா 2,200,000 ஆக ஆரம்ப விசாரணை அறிக்கையில் காண்பிக்கப்பட்டிருந்தது. இந்த சம்பவம் தொடர்பாக முறையான பரிசோதனை ஒன்று நடாத்தி பொறுப்பு வாய்ந்தவர்கள் இருப்பார்களாயின் அந்த நட்டத்தை அறவிடுவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. 2014 ஆம் ஆண்டு முதல் ஏப்ரல் மாதம் 09 ஆம் திகதியில் உள்ளவாறு பின்னர் அந்தக் கோவை நாளது வரையாக்கப்படாதிருந்தமையும் அவதானிக்கப்பட்டது. | பதிலளிக்கப்படவில்லை | பிரமாணங்களின் பிரகாரம் பரிசோதனை நடாத்தி பொறுப்பு வாய்ந்தவர்களிடம் இருந்து நட்டத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| **(உ) புகையிரத எஞ்சின் பழுது பார்த்தல் மற்றும் பராமரித்தல்**<br><br>புகையிரத்திற்குச் சொந்தமான M Class எஞ்ஜின் 103 உம், S Class எஞ்ஜின் 133 உம் 2023 ஆம் ஆண்டின் இறுதியில் காணப்பட்டதுடன் அதில் முறையே 47 எஞ்ஜின் மற்றும் 31 எஞ்ஜின்களை பழுது பார்ப்பதற்காக ஓட்டத்தில் இருந்து அகற்றப்பட்டிருந்தது. இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன. | | |
| (i) கணக்காய்வுக்கு உட்படுத்தப்பட்ட M class எஞ்ஜினின் பெறுமதி ரூபா 15 மில்லியன் முதல் 765 மில்லியன் வரையிலான பெறுமதியிலும் S class எஞ்ஜினின் பெறுமதி ரூபா 8 மில்லியன் முதல் ரூபா 218 மில்லியன் வரையிலான பெறுமதியிலும் கொள்வனவு செய்யப்பட்டிருந்தது. பழுதுபார்த்தலுக்கு அனுப்பப்பட்டிருந்த M class எஞ்ஜின் 47 மற்றும் 31 S class எஞ்ஜின் என்பன பழுது பார்க்கப்படாமல் 01 இற்கும் 07 வருடங்களுக்கும் இடையிலான காலமாக ஓட்டக் கூடங்களில் (running shed இல்) அல்லது இரத்மலானை வேலைத் தளத்தில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது. | பதிலளிக்கப்படவில்லை | எஞ்ஜினைப் பழுது பாரப்பதற்கான திட்டம் ஒன்று தயாரித்து அதன் பிரகாரம் பழுது பார்த்தல்களை பூரத்தி செய்தல் வேண்டும். |
| (ii) ஒரு எஞ்ஜினின் பெறுமதி ரூபா 765 மில்லியன் வீதம் 2019 ஆம் ஆண்டின் இறுதியில் கொள்வனவு செய்யப்பட்டிருந்த M-11 எஞ்ஜின் 10 இல் 05 எஞ்ஜின்கள் ஓட்டத்தில் இருந்து அகற்றப்பட்டு பழுது பார்த்தலுக்காக அனுப்பப்பட்டிருந்தது. ஆரம்ப காலத்தின் போது கொள்வனவு செய்யப்பட்ட M class எஞ்ஜின்களின் செயற்படு நிலை உயர்ந்த நிலையில் காண்பிக்கப்பட்ட போதும் | பதிலளிக்கப்படவில்லை | எஞ்ஜின்களைக் கொள்வனவு செய்யும் போது தொழில் நுட்ப ரீதியில் இலங்கையின் வீதிகள் மற்றும் ஏனைய தேவைகளுக்கு மிகவும் ஈடு கொடுக்கின்ற எஞ்ஜின்களை |

| | | |
|---|---|---|
| அண்மையில் கொள்வனவு செய்யப்பட்ட எஞ்ஜின்களின் செயற்படுநிலைமை நலிவடைவதற்கு தொழில் நுட்ப மற்றும் ஏனைய குறைபாடுகள் காரணமாக இருந்தது. | | கொள்வனவு செய்தல் வேண்டும். |

**3.10 முகாமைத்துவ நலிவுகள்**

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | பொலன்னறுவை புகையிர நிலையத்தின் வளவில் புகையிரத மேடை எல்லையில் தற்போது பல வருட காலங்களுக்கு முன்னர் இரண்டு மாடிக் கட்டிடம் ஒன்று வெளித்தரப்பினரால் நிர்மாணிக்கப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டதுடன் அது தொடர்பாக கணக்காய்வுத் திகதி வரையிலும் அனுமதியற்ற நிர்மாணம் தொடர்பாக எந்த ஒரு சட்டரீதியான நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. | பதிலளிக்கப்பட வில்லை. | அனுமதியற்ற புகையிர திணைக்கள வளவில் கைப்பற்றுதல் தொடர்பான நபருக்கு உரிய நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | மட்டக்களப்பு ஓட்டக் கூடத்தில் தற்போது 10 வருடங்களுக்கு மேற்பட்ட காலம் முதல் பயன் படுத்தப்படாத லீற்றர் 45000 (கலன் 10,000) எரிபொருள் இருப்பு தாங்கி ஒன்று காணப்பட்டதுடன் தற்போது லீற்றர் 27,000 அளவில் சிறிய தாங்கி ஒன்று ஓட்டக் கூடத்தில் எரிபொருள் களஞ்சியப்படுத்துவதற்காக பயன்படுத்தப்பட்டிருந்தது. இதன் காரணமாக இருப்பு தாங்கியின் லீற்றர் 500 இனை விட குறைவடைந்ததில் இருந்து மீண்டும் எரிபொருள் கொண்டு வந்து தாங்கியில் (BGT) எரிபொருள் வழங்குவதற்கு அல்லது எரிபொருள் போக்குவரத்துச் செய்கின்ற தாங்கி ஒன்று (BGT) இரண்டு சந்தர்ப்பங்களின் போதும் இருப்பு தாங்கிக்காக விடுவிப்பதற்கு (unload இடுவதற்கு) ஏற்பட்டிருந்தது. அதன் பிரகாரம் எரிபொருள் போக்குவரத்துச் செய்யப்படுகின்ற தாங்கி ஒன்று (BGT) 04 | பதிலளிக்கப்பட வில்லை | சொத்துக்களை உச்ச அளவில் செயற்திறனாகவும் வினைத்திறன் ஆகவும் பயன்படுத்துதல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | நாட்களுக்கும் 11 நாட்களுக்கும் இடையிலான கால வீச்சில் மட்டக்களப்பு புகையிரத நிலையத்தில் அல்லது ஓட்டக்கூடத்தில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது. | | |
| (இ) | புகையிர சாரதிகளின் சேவை சுழற்சியினைத் தயாரித்தல், சேவையில் ஈடுபடுத்துதல், மேற்பார்வை செய்தல், கொடுப்பனவு செய்யும் முறைமைகளை கால ரீதியில் தொழில்நுட்ப திட்டத்தை பயன்படுத்தி அமுல்படுத்துவதற்கு முகாமைத்துவம் தவறியிருந்தது. | பதிலளிக்கப்பட வில்லை. | சேவை சுழற்சி தயாரிக்கும் போது தற்போதைய தொழில்நுட்ப முறைமையில் சீராக்கி முறையான திட்ட முறைமை ஒன்றைத் தயாரித்தல் வேண்டும். |
| (ஈ) | “பிபிதெமு பொலன்னறுவ” அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் நிதி நிலையம் ஒன்றை நிர்மாணிப்பதற்காக புகையிரத திணைக்களத்திற்குச் சொந்தமான காணி நகர அபிவிருத்தி அதிகார சபைக்கு வழங்குவதற்காக கையொப்பம் இடப்பட்ட புரிந்துணர்வு உடன்படிக்கை மற்றும் அதன் செயற்படு நிலையை பரிசோதனை செய்த போது பின்வரும் விடயங்கள் வெளிப்படுத்தப்பட்டன. | | |
| (i) | புரிந்துணர்வு உடன்படிக்கையின் நிபந்தனை 02 இன் பிரகாரம் நில வரைபட இலக்கம் LA/34/16 இல் கூறு இலக்கம் 02 இல் சதுர அடி 442 இல் கூட்ட மண்டபம் ஒன்று நகர அபிவிருத்தி அதிகார சபையின் மூலம் நிர்மாணிக்கப்பட்டு புகையிரத திணைக்களத்திற்கு கையளிக்கப்பட்டிருந்த போதிலும் கணக்காய்வு சந்தர்ப்பம் ஆன 2023 ஒக்தோபர் 16 ஆம் திகதி வரையிலும் உடன்படிக்கைக் காலம் முடிவடைந்து 03 வருடங்களும் 06 மாதங்களுக்கும் அண்ணளவான காலம் கடந்திருந்த போதும் அந்தக் கட்டிடத்தின் நிர்மாணங்கள் ஆரம்பிக்கப்படாது இருந்ததுடன் உடன்படிக்கையின் பிரகாரம் அதனைப் பெற்றுக் கொள்வதற்காக புகையிரதத் | பதிலளிக்கப்பட வில்லை. | உடன்படிக்கை நிறைவேற்றாமை தொடர்பாக கண்டறிந்து தேவையான நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | திணைக்களத்தால் நடவடிக்கையும் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | | |
| (ii) | புரிந்துணர்வு உடன்படிக்கையின் நிபந்தனை 09 இன் பிரகாரம் நிரந்தர வீதி பரிசோதகர் அலுவலகம், ஓய்வு அறை, உபகரண களஞ்சியம், எண்ணெய்க் களஞ்சியம் மற்றும் மாவட்ட பொறியியலாளர் ஓய்வு கூடம் இற்காக பொருத்தமான பிரகாரம் பழுது பார்த்தல்கள் மேற்கொண்டு கமநல சேவைகள் திணைக்களத்திற்கு கையளிக்கப்படுகின்ற கட்டிடம் கமநல சேவைத் திணைக்களம் பயன்படுத்துகின்ற கட்டிடம் மற்றும் அந்த காணிப் பகுதி கமநல சேவைகள் திணைக்களத்தில் இருந்து விடுவித்து நகர அபிவிருத்தி அதிகார சபையினால் புகையிரத திணைக்களத்திற்கு வழங்க வேண்டியிருந்த போதிலும் கணக்காய்வுத் திகதி வரையிலும் அந்தக் கட்டிடம் மற்றும் காணி என்பன புகையிரதத் திணைக்களத்திற்கு வழங்கப்பட்டிருக்கவில்லை. | பதிலளிக்கப்பட வில்லை | உடன்படிக்கை நிறைவேற்றாமை தொடர்பாகக் கண்டறிந்து தேவையான நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (iii) | உடன்படிக்கை நிபந்தனை 15 இன் பிரகாரம் புரிந்துணர்வு உடன்படிக்கை நிபந்தனைகளில் ஒன்று அல்லது சில ஒரு தரப்பினரால் மீறப்படும் ஆயின் சரிசெய்வதற்காக 30 நாட்கள் காலம் வழங்கப்பட்டு அந்த தரப்பினருக்கு புரிந்துணர்வு உடன்படிக்கை இரத்துச் செய்வதற்கான உரித்து காணப்பட்ட போதும் மேற்கூறப்பட்ட பிரகாரம் நகர அபிவிருத்தி அதிகார சபையின் மூலம் செயற்திட்டம் குறித்துரைத்த காலத்தில் பூர்த்தி செய்யப்படாது இருக்கும் போது மற்றும் கையேற்கப்பட்ட காணியின் பெறுமதிக்காக உடன்படிக்கையின் பிரகாரம் புகையிரத திணைக்களத்திற்கு வழங்க வேண்டிய வசதிகள் வழங்காதிருக்கும் போது உடன்படிக்கை இரத்துச் செய்து புகையிரதத் திணைக்களம் காணியின் உரித்தை மீளக் கையேற்றிருக்க வில்லை. | பதிலளிக்கப்பட வில்லை. | உடன்படிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்காமையின் அடிப்படையில் உடன்படிக்கை இரத்துச் செய்து உரித்தைக் கையேற்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (உ) | திருகோணமலை புகையிரத நிலையத்தைச் சுற்றி உப வீதிகளுக்காக 19 மூங்கில் கதவுகளை செயற்படுத்துதல் புகையிரதத் திணைக்களத்தால் மேற்கொள்ளப்படாதிருந்ததுடன் இந்த கதவுகளை அமுல்படுத்துதல் பொலிஸின் பொறுப்பில் காணப்பட்டது. அதற்காக 19 கதவு காவலர்கள் ஈடுபடுத்தப்பட்டு மாதம் ஒன்றுக்கு ரூபா 7,500 வீதம் கொடுப்பனவு மேற்கொள்ளப்பட்ட போதும் அநேகமான சந்தர்ப்பங்களில் அந்த காவலர்கள் புகையிரதம் வருகைதரும் போது அவ்விடங்களில் இல்லாதிருந்தமையால் விபத்துக்கள் ஏற்பட்டமை அந்த செயற்பாடுகள் உரிய பிரகாரம் மேற்கொள்ளப் படாதிருந்ததாக புகையிரத நிலையத்திற்கு முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்றுள்ளதுடன் இது தொடர்பாக உரிய வேலைத் திட்டம் ஒன்று அமுல்படுத்தப்படவில்லை. | திருகோணமலை மாவட்ட அதிகாரப் பிரதேசத்தில் சமூக பொலிஸ் பிரிவின் மூலம் ஊழியர்கள் ஈடுபடுத்தப்பட்டு நிருவகிக்கப்படுகின்ற 19 புகையிர குறுக்கு வீதிகளில் அமர்த்தப்பட்டுள்ளனர். இந்த புகையிரத குறுக்கு வீதிகளுக்காக சிவில் பாதுகாப்பு படையணி மற்றும் பிரதேசத்தில் உரிய பொலிஸ் நிலையங்களுடன் தொடர்பினை ஏற்படுத்தி கதவு பாதுகாவலர்களை ஈடுபடுத்துவதற்கு நடவடிக்கை எடுப்பதாக 2023.06.07 ஆந் திகதி மாவட்ட இணைப்பு குழுக் கூட்டத்தின் போது தீர்மானிக்கப்பட்டிருந்தது | பாதுகாப்பை உறுதிப்படுத்துகின்ற வகையில் முறையான வேலைத் திட்டம் ஒன்று விரைவாக அமுல்படுத்துதல் வேண்டும். |

## 4. நல்லாளுகை

### 4.1 பொதுமக்களுக்கு சேவையினை நிறைவேற்றுதல்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| புகையிரதத் திணைக்களத்தின் பிரதான பணிப் பொறுப்பான செயற்திறனான போக்குவரத்துச் சேவையினை பொதுமக்களுக்கு வழங்குவதாக இருந்த போதிலும் 2023 ஆம் ஆண்டின் போது திட்டமிடப்பட்ட மொத்த புகையிரத ஓட்ட தடவைகளின் எண்ணிக்கை 122,426 ஆக இருந்ததுடன் அதில் குறித்துரைத்த நேரத்தில் ஓடப்பட்டிருந்த மொத்த புகையிரத தடவைகளின் எண்ணிக்கை 36,771 ஆகும். இரத்துச் செய்யப்பட்ட மொத்த புகையிரத தடவைகளின் எண்ணிக்கை 10,531 ஆக காணப்பட்டமையால் புகையிரத தடவைகளில் 70 சதவீதம் | பதிலளிக்கப்படவில்லை | திட்டமிடப்பட்ட புகையிரத தடவைகளின் எண்ணிக்கையை குறித்துரைத்த நேரத்தில் ஓடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

குறித்துரைத்த நேரத்தில் ஓடியிருக்கவில்லை. திட்டமிடப்பட்ட பிரயாணிகள் புகையிரதம் ஓடும் தடவைகளின் எண்ணிக்கை 113,759 இல் குறித்துரைத்த நேரத்தில் ஓடப்பட்டிருந்த பிரயாணிகள் புகையிரதத்தின் எண்ணிக்கை 36,053 மாத்திரம் ஆகும்.

## 5. மனித வள முகாமைத்துவம்

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | திணைக்களத்தின் அங்கீகரிக்கப்பட்ட மொத்த பதவியணியினர் 20,604 ஆக இருந்ததுடன் மீளாய்வாண்டின் இறுதித் திகதியில் சிரேஸ்ட நிலையில் 83, மூன்றாம் நிலையில் 383 மற்றும் இரண்டாம் நிலையில் 5,727 ஆக 6,223 பதவிகளில் வெற்றிடங்கள் காணப்பட்டது. அது அற்கீகரிக்கப்பட்ட ஊழியர் எண்ணிக்கையில் 30 சதவீதம் ஆக இருந்தது. | பதிலளிக்கப்பட வில்லை. | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரை மீண்டும் மீளாய்வு செய்து அத்தியாவசிய பதவியணியினரை இனங்கண்டு சுற்றறிக்கை ஏற்பாடுகளைக் கவனத்தில் கொண்டு வெற்றிடங்கள் நிரப்பப்படல் வேண்டும். |
| (ஆ) | 2018 சனவரி 24 ஆந் திகதி அரச நிர்வாக சுற்றறிக்கை இலக்கம் 2/2018 இன் பிரகாரம் அரச நிறுவனங்களில் மனித வள அபிவிருத்தியை நோக்காகக் கொண்டு சுற்றறிக்கை மூலம் இலங்கையின் அரச சேவையில் ஈடுபட்டிருக்கின்ற மனித வளங்களை நாட்டின் அபிவிருத்தியை நோக்காகக் கொண்டு மிகவும் செயற்திறனாகவும் வினைத்திறனாகவும் ஈடுபடுத்தும் வகையில் அரச துறைக்குச் சொந்தமான மனித வளத் திட்டங்களுடன் ஈடுபடுத்தும் தேவை தொடர்பாக வழிகாட்டல்கள் வழங்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் மேற்கூறப்பட்ட நோக்கங்களை நிறைவேற்றுவதற்காக மனித வள | மனித வள அபிவிருத்தி திட்டம் தயாரித்து சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. | சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

அபிவிருத்தித் திட்டம் ஒன்றைத் தயாரிப்பதற்கும், 2018 ஆம் ஆண்டு முதல் மேற்கொள்ள வேண்டிய ஒட்டு மொத்த பதவி அணியினருக்கான வருடாந்த செயலாற்றல் உடன்படிக்கையைக் கைச்சாத்திடுவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.